காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

30-4-72

உள்ளே......

புறக்கணிக்க நினைக்கும் முன்பு...
(தலையங்கம்)

1961-ஆம் ஆண்டுக்கான திட்டம் இதுதானா?
(டாக்டர் அறிஞர் அண்ணா)

காமாலைக் கண்ணுக்கு!
(சிறப்புக் கட்டுரை)

உனக்கா கல்யாணம்?
(சிறுகதை)

விலை 25 காசு

தமிழக மேலவைத் தலைவர் சி. பி. சிற்றரசு அவர்களின் பிறந்த நாளன்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மாலை அணிவித்து மகிழ்கிறார்.

சிறப்புக் கட்டுரை!

காமாலைக் கண்ணுக்கு...?

குருடர்களுக்கு நடுவே அகப்பட்டுக் கொண்ட யானையைப் பற்றியும், அந்த யானையை ஆளுக்கொருவிதமாகப் புரிந்துகொண்ட அசட்டுத்தனம் பற்றியும் எப்போதோ ஒரு கதையைக் கேட்டதாக நினைவு.

அந்தக் கண்ணற்றக் குருடர்களுக்கும், தியாகபூமிக் கருத்துக் குருடர்களுக்கும் அதிக வேறுபாடில்லை என்பதை உணர்ந்துகொள்ளும்போதுதான், என்றோ ஒருநாள் கற்பனைக் கதையினைக் கேட்டதன் பயனை அறிய முடிகிறது.

ஆளுக்கொரு அங்கத்தைத் தொட்டுப் பார்த்த அந்தக் குருடர்களுக்கு 'அப்பன்கள்' என்பதை மெய்ப்பிப்பதைப்போல, மாநில சுயாட்சி ஆராய்ச்சியில் இறங்கியுள்ள ஜனசங்கங்களுக்கு இனி எதைச் சொல்லியும் சில உண்மைகளைப் புரியவைக்கவே முடியாது. காரணம் உண்மையின் நிழலைத் தொடுவது கூட பாவம் என்று கருதிக்கொண்டிருப்பவர்கள் அவர்கள்.

அண்மையில் காஞ்சியில் நடைபெற்ற கழக மாநாடுபற்றிக் கட்டுரை ஒன்றினையும், தலையங்கம் ஒன்றினையும் தீட்டியுள்ள தியாக பூமித் தீவட்டிகளுக்கு மாநில சுயாட்சி பற்றிய கருத்துக்கள் அள்ளித் தெளித்த முத்துக்களாக ஆகிவிட்டன என்பதை வருத்தத்துடன் தெரிவித்தே தீரவேண்டும்.

கடைக்காரர், கடைப் பையன் என்றெல்லாம் ஒடித்தேடி உதாரணங்களைப் பிடித்து உண்மையை மறைப்பதற்கு நினைத்தால், தமிழகத்துப் புல்கூட 'போடாதம்பி' என்று தலையாட்டிவிடும்.

ஒரு பொருளின் விலையை இரண்டு ரூபாய் என்று சொல்லும் கடைப் பையனைப் போன்றவராம் திரு. ஆலடி அருணு!!

"ஏன்டா, உனக்கு எத்தனைத் தடவை சொல்வது, அதை 2-25 ரூபாய்க்குக் குறைவாகக் கொடுக்காதே என்று?" எனக் கடைக்காரப் பையனைக் கோபித்துக்கொண்டு, "ஏதோ அவன் சொல்லிவிட்டான்; பரவாயில்லை; 2 ரூபாயே கொடுங்கள்" என்று வாடிக்கைக்காரரிடம் சொல்லும் கடைக்காரனைப் போன்றவராம் கலைஞர்.

இப்படி ஏய்த்தே பழக்கப்பட்டு விட்டால் எல்லாரையும் அப்படித்தான் நினைக்கத் தோன்றும் போலும். அரசியலை வியாபாரமாக்கிக் கொண்டவர்களுக்கு, அடுத்தவர்களைப் பார்த்தாலும் அப்படித்தான் தெரியும் போலும்!!

பிரிவினை வேண்டுமா வேண்டாமா என்று மக்களிடம் வாக்கெடுப்பு எடுத்தால், பிரிவினையை எதிர்த்து விழும் முதல் வாக்கு என்னுடையதாகவே இருக்கும்" என்று கலைஞர் சொல்லியது, கடைக்காரன் பேசியது போன்றது என்று கதைவிடும் தியாகபூமி, தன்னுட்சி யானையைத் தடவிப் பார்க்காமல், காலையும், காதையும், வாலையும் தடவிப் பார்த்துவிட்டு 'தூண், முறம், துடைப்பம் என்று கூறி துள்ளுவதைப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது.

திரு. ஆலடி அருணு அவர்கள்' முஜிபுர் ரகுமான்கள் தோன்றுவார்கள் என்றுராம்; மத்திய அரசு யாகியாகானுக மாறவேண்டாம்

— போடியன் —

என்று கேட்டுக் கொண்டாராம் கழக ஆட்சியை அகற்ற மத்திய அரசு முற்பட்டால் ரத்தக் களறி ஏற்படும் என்று எச்சரித்தாராம். இவற்றை எல்லாம் கலைஞர் கண்டிக்கவில்லையாம்.

தியாகபூமிக்குத் தினையளவாவது நேர்மைத் திறன் இருக்குமேயானுல் பதில் சொல்லட்டும்.

முஜிபுர் ரகுமான் என்ன அயூப்கானு? இல்லை, யாகியாகானு? சீனத்து மாசேதுங்கா? முஜிபுர் ரகுமான்கள் தோன்றுவார்கள் என்றுல் இந்தியாவிற்கும், இந்திய ஒற்றுமைக்கும் முஜிபுர் ரகுமான் என்ன எதிரியா? அப்படி இருக்கும்போது முஜிபுர் ரகுமான்கள் தோன்றுவார்கள் என்றுல் கழுத்தறுபட்ட கோழிகள்போல் குதிப்பானேன்?

கொடுமையை எதிர்த்த கொள்கைக் குன்று முஜிபுர் ரகுமான் என்றுல், அந்தக் கொடுமையை எதிர்க்கும் குணத்தினரை முஜிபிர் ரகுமான்கள் என்பது தவறு?

முஜிபுர் ரகுமான் என்றவுடன் நாட்டைத் துண்டாடியவர் என்ற நினைவுதான் வரவேண்டுமா? தன் நாட்டு மக்களின் நலன்களைக் காத்தவர்; தன் தாய்மொழியின் நலன்களைக் காத்தவர்; தன் நாட்டு மக்களுக்குத் தன்னையே கொடுத்தவர் என்ற நினைவு வரக்கூடாதா?

இன்றைக்கு இந்தியாவே முஜிபுர், முஜிபுர் என்று தலைமேல் வைத்துக் கொண்டு கூத்தாடுகிறதே, அவர் நாட்டைத் துண்டித்தவர் என்பதற்காகவா? இல்லையே!! அப்படி இருக்கும்போது முஜிபுர் ரகுமான்கள் தோன்றுவார்கள் என்றுல், பிரிவினைப் பூச்சாண்டி காட்டுவது ஏன்?

ஒரு இயக்கத்தின் முதல்வர், ஒரு கட்சியின் தலைவர், சட்ட மன்றத்திலும், மக்கள் மன்றத்திலும், மாநாட்டிலும், நாங்கள் பிரிவினையை விட்டுவிட்டோம்; பிரிவினை கேட்கவில்லை: பிரிவினையை எதிர்த்துவிழும் முதல் வாக்கே என்னுடையதுதான்; முதலில் நாட்டின் ஒற்றுமை, பிறகே மாநில சுயாட்சி என்றெல்லாம் உறுதியளித்த பிறகு, திரும்பத் திரும்ப நீ பிரிவினை கேட்கிருய் என்றுல் அது பச்சை அரசியல் கீழ்மைதானே. எதிர்க்க வேறு வழியில்லாமல் எதையாவது சொல்லி எதிரியை அழிக்க எண்ணும் இழிந்த போக்குதானே!!

நாடாளுமன்றத்தில், நாடாளுமன்றக் கழகத் தலைவர் என்ற முறையில் திரு. மனேகரன் அவர்கள் மாநில சுயாட்சி என்பது அதிகாரப் பங்கீடே; பிரிவினை அல்ல; பிரிவினை நோக்கத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டோம் என்று சொல்லிய பிறகு, ஜனநாயகப் பண்பு உள்ளவர்கள் மாநில சுயாட்சியையும், பிரிவினையும் இணைத்துப் பேசுவார்களா? தன்னுட்சி வேறு தனி நாடு வேறு; சுயாட்சி வேறு, பிரிவினை வேறு, சில உரிமை வேண்டும் என்பதும், விடுதலை என்பதும் ஒன்றல்ல என்றெல்லாம் விளக்கிவிட்ட பிறகு, அரசியல்—விளையாட்டுப் பிள்ளைத் தனம் இருக்கலாமா?

"உரிமைக்கு வேங்கடம், உறவுக்கு இமயம்" என்று நாளெல்லாம் இந்திய ஒற்றுமையை வலியுறுத்தி வரும் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் காலமெல்லாம் சுயாட்சி

(4-ஆம் பக்கம் பார்க்க)



காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13 ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 30—4—72 | இதழ் 42

புறக்கணிக்க நினைக்கும் முன்பு . . .

இந்தக் கிழமை டில்லி சென்று, தலைமையமைச்சரைச் சந்தித்து விட்டுத் திரும்பி இருக்கும் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், நாட்டவருக்கு ஒரு பொது வேண்டுகோளை விடுத்திருப்பது சிறப்பான கவனத்துக்கு உரியதாகும்.

கழகப் பேச்சாளர்கள் உட்பட, தமிழக அரசியலில் மேடையேறிக் கொண்டிருக்கும் அனைவருமே, தமது பேச்சுக்களில், நாகரிகமும், பண்பாடும் இருக்கும்படி கவனித்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் அந்த வேண்டுகோள்.

அரசியல் என்பதனை, ஒரு அழுக்குக் குட்டை என்று வருணித்தவன் ஒரு தீர்க்கதரிசியாகத்தானிருக்க வேண்டும்.

அழுக்குக் குட்டையில் மூழ்கி எழுந்து வருபவனிடம் தூய்மையை எதிர்பார்க்க முடியாதுதான். என்றாலும், தூய்மையுடன் இருக்கக்கூடாது என்பது விதியல்ல. எனவேதான், அரசியல் வாதிகள் சற்றே பண்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டும் என்ற கருத்தை கலைஞர் அவர்கள் எடுத்துக் காட்டி இருக்கிறார்கள்.

அரசியலில் குடும்ப உணர்வைப் புகுத்தி வளர்ப்பதென்பது அரிய ஒரு முயற்சியாகும். உலகத்திலேயே எந்த ஒரு அரசியல் கட்சியும் குடும்ப உணர்வுடன் வளர்க்கப்பட்டும், கட்டிக் காக்கப்பட்டும் வந்திருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டுக்களே இல்லை, தமிழகத்தில் தி. மு. க. நீங்கலாக!

தி. மு. கழகம், கண்ணீர்மல்கலுக் கிடையே கண்ணீர்த் துளிகள் என்ற பெயரோடு பிறந்ததனாலேயோ என்னவோ, அது குடும்பப் பாசத்துடன் வளர்க்கப்பட்டு, இன்றளவும் அந்தப் பந்தம் குன்றாமல் குறையாமல் வளர்ந்தோங்கி வருகிறது.

அரசியல் கட்சிகளின் வளர்ச்சி, அது இதயமாகக் கொண்டிருக்கும் கொள்கையின் அடியாக உருவாவதாகும். அந்தக் கொள்கையின் வலு காரணமாகத்தான், தேசியக் காங்கிரசுக் கட்சியும், ஒருவித பாசப் பிணைப்புடன் வளர்ந்தது, ஆனால் அதன் இலட்சியம், நாடு சுதந்திரமடைந்து விட்டது என்ற அறிவிப்போடு முற்றுப் பெற்றுவிட்டதனால், அதன் எதிர் காலத்தை பாசப்பிணைப்புடன் வைத்துக் கொண்டிருக்க இயலாமற்போய்விட்டது.

மற்ற மற்ற அரசியல்கட்சிகளுக்கு, பொது முன்னேற்றங்கள் மட்டிலுமே அடிப்படை இலட்சியங்களாக இருந்தமையால், அது விரும்பத்தக்க அளவுக்கு, அல்லது குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றங் காண—வளர்ச்சியடைய இயலாமற் போய்விட்டிருக்கின்றன.

தங்கள் வளர்ச்சியில், முன்னேற்றங் காணமுடியாதவர்களும், வளர்ந்து முடங்கி, முடமாகிப் போனவர்களும், தங்கள் தங்களது ஏமாற்றத்தை, காழ்ப்புணர்வு என்றரீதியில் காட்டிக்கொள்ள முனைந்ததன் எதிரொலியால்தான், நாடெங்கும் பரவலாக, இன்றைக்கு அரசியல்கட்சிகளிடையே ஒருவித அசூயைத் தன்மை வேர்விட்டு வளர்ந்திருக்கிறது. இந்த வேரிலிருந்து விளைவனதான், ஆபாசப் பேச்சுக்களும், பண்பாட்டுக் குறைவான நடைமுறைச் செயல்களும், நாகரிகமற்ற போராட்டத் திட்டங்களும் என்றே கருதவேண்டியிருக்கிறது.

அரசியல் கட்சிகளுக்கிடையே, ஒருமித்த கருத்தும், ஒருமித்த கொள்கையும் இருக்குமானால், அவை அனைத்தும் தனித் தனி பெயருடன், தனித் தனிக் கொடிகளுடன் உலாவந்து கொண்டிருக்க வேண்டிய எந்த அவசியமும் இல்லை. ஒன்றுக்கொன்று ஒருமித்த கருத்துக்கள் இல்லாததனாலேயே, பல கட்சிகள் நடை பயின்று கொண்டிருக்கின்றன.

மக்களுக்குக் கிடைக்கவேண்டியது நல்வாழ்வு; அந்த வளவாழ்வை, மக்கள் பெற இதுதான் வழி என்று எடுத்துக் காட்டுவதிலேதான் இன்றைக்கு வேறுபாடுகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன.

அந்த வாழ்வுக்கான திட்ட வேறுபாடுகளை மட்டிலுமே அரசியல் கட்சிகள் தங்கள் வாதத்துக்கும் விமர்சனத்துக்கும் எடுத்துக் கொண்டால், டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, அரசியல் மேடைகள் பண்பாட்டுக் குறைவாக மாறாது, பயன்தரத்தக்க விளைவை அறுவடை செய்வனவாக மாறமுடியும்.

ஆனால், நாடெங்கும் ஒட்டுமொத்தமாக, "மக்களது வாழ்வு" என்ற மகுடத்தின்கீழ் சிலதலைவர்கள், தங்கள் தங்கள் வாழ்க்கைக்கான ஒருவாணிகமாக அரசியலை மாற்றிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதைத்தான் இன்றைக்குக் காண முடிகிறது.

அரசியல் என்பது வணிகப் பொருளாக மாறிவிட்ட அந்த நேரத்திலேயே, அந்த அங்காடியில் நாணயம், நேர்மை முதலியன அற்றுப் போய், தத்தம் பொருட்களுக்கான விற்பனையைப் பெருக்கும் முயற்சி என்ற ராஜதந்திரங்களைக் கையாளவேண்டிய நிர்ப்பந்தமும் தானாக ஏற்பட்டுவிடுகிறது.

இத்தகையமோதல்களே இன்றைக்கு அரசியலை அழுக்குக் குட்டையாகக் காட்டிக்கொண்டிருக்கின்றன.

கொள்கைகளுடன் கூடியவிமர்சனங்களை, நாட்டு அரசியல் கட்சிகள் தம்மிடமிருந்து விடுவித்துக் கொண்டு, மாறாக, தனிப்பட்டவர்களை விமர்சிக்கும்

தரங்கெட்ட தன்மைக்குத் தங்களைத் தயார் செய்து கொண்டு விட்டிருக்கின்றன.

தாக்குக்குத் தாக்கு; அறைகூவலுக்கு அறைகூவல் என்று நிலைமைகள் மாறிப்போய், அவற்றிற்கிடையே தனிநபர்களை விமர்சிக்கும் நிலைமையும் தோன்றிவந்திருக்கின்றன.

விரும்பத்தகாத இந்த நிலைமைகள், தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், துணைக்கண்டம் முழுவதுமே இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.

அரசியலுக்கும், தனிநபர் தூற்றலுக்கும் என்ன தொடர்பு? என்பதைப் பற்றித் தொடர்புடையவர்கள் எவருமே சிந்தித்துக் கொண்டிருப்பதாகத் தோன்றவில்லை.

தனி நபர் தூற்றல்தான் அரசியல் என்று ஆகிவிட்ட துர்ப்பாக்கியம் நாட்டுக்கு ஒரு சாபத்தீடாகும்.

ஊறிப் போய்விட்ட இந்த இழிநிலையைக் களைந்தெறிய வேண்டுமானால், அரசியலை, அரசியலாக மட்டுமே காண்கின்ற மனமாற்றத்தைக் கட்சிகள் பெற்றாக வேண்டும்.

தானாகவே கட்சிகள் அதனைப் பெறும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. எவரேனும் முன்நின்று முனைந்து செயல்பட்டாக வேண்டும்.

கொள்கைகள் ஒருமித்த கட்சிகள், தனிப் பெயர்களையும், கொடிகளையும் தூக்கியெறிந்துவிட்டு ஒன்றிணைந்து தாங்கள் மகுடமிட்டுக் கொண்டிருக்கும் "மக்கள் வாழ்வு" என்பதற்கு உண்மையிலே பாடுபட, வழிகாட்ட முன்வர வேண்டும்!

அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை, நாடெங்கும் மொத்தமாகக்குறைய முடியுமானால், அதுவும் சரியானதொருவழியாக இருக்கமுடியும். இப்படிக் கூறுவதனால் அரசியல் கட்சிகளை அதிகார பலத்தால் அழித்துவிட வேண்டும் என்று பொருளல்ல; ஒன்றோடொன்று இணைவதனால்கூட எண்ணிக்கைகள் குறைய முடியும்.

இவையெல்லாம், இன்றைக்குமட்டுமல்ல, இனி இந்தியாவின் அரசியலில் என்றுமே நடைபெறப் போவதே இல்லை.

ஆனால், குறைந்தபட்சம், டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, கட்சிகள் கொள்கை விமர்சனங்களை மட்டும், பண்பாட்டோடு, நாகரிக வழியில் மேற்கொண்டுதான் தீரவேண்டும்.

தரக்குறைவான பண்பாடற்ற ஆபாசப்பேச்சுக்களை மக்களாகவே முன்வந்து புறக்கணிக்க நினைக்கு முன்பு, கட்சிகளே, தங்களை மாற்றிக் கொள்வதுதான் நல்லது.

கட்சிகளுக்கு மட்டுமல்ல—நாட்டுக்கும் அதுதான் நல்லது.

— திருவாரூர் முத்துராமன்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

...சுயாட்சி என்று முழக்கமிடுகிறாரே, அவர் பிரிவினையை என்றும் எதிர்ப்பவர்தானே!!

ஜயப்பிரகாஷ் நாராயணனைப் போன்றவர்களே அதிக அதிகாரங்களை மாநில அரசுகள் கேட்பது பிரிவினை அல்ல என்று கூறும்போது தியாகபூமிகள் தெளிவடையாமல் இருக்கலாமா?

'அட்டானமி' என்று ஆங்கிலத்தில் கேட்கும்போது ஆமாம் சாமிகளாக இருப்பவர்கள், அதை மொழி பெயர்த்துக் கூறும்போது மட்டும் மூலிகளாகப் போவதேனோ?

கன்னட சிண்டிகேடர்கள் மாநில சுயாட்சி இல்லையேல் பிரிவினைதான் என்னும் போக்கில் முழக்கமிட்டபோது மூங்கைகளாக இருந்த தியாகபூமிகள் தமிழகத்தில் மட்டும் தாவிக் குதிப்பானேன்?

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவையென 'வலது'களும், 'இடது'களும் தீர்மானங்கள் நிறைவேற்றியபோது அணைந்து கிடந்ததுகள் கழகம் கேட்கும்போது மட்டும் எரிந்து திரிவானேன்?

மாமிகள் உடைப்பதெல்லாம் மண்பாண்டமா? அதுதான் போகட்டும், கழகத்தைப் பார்த்தால் உங்கள் கண்களுக்கு மருமகளாகவா காட்சி தருகிறது?

தியாகபூமிக்கும், அதன் தொண்டரடிப் பொடிகளுக்கும் திட்டவட்டமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறோம்.

மாநில சுயாட்சி பற்றி அளவுக்கும் அதிகமாகவே விளக்கியாகிவிட்டது. இன்னும் புரியவில்லையென்றால், குறையாடு சுயாட்சியிடமும் இல்லை; சொல்பவர்களிடமும் இல்லை!!

விதையும் நல்ல விதை; நீரும் நன்றாகப் பாய்கிறது; உரமும் இட்ட பிறகு உரிய பயன் இல்லையென்றால், நிலந்தான் களராக இருக்க வேண்டும்!!

ஏற்க முடியவில்லையென்றால், காரணங்களைக் கூறி கழகத்தின் நோக்கத்தை எதிர்த்துப் பாருங்கள்!!

அதிக அதிகாரங்கள் மாநிலங்களுக்குத் தேவையில்லை; அதிகாரமே வேண்டாம்; அப்போதுதான் ஆறெல்லாம் பாலாகும், அலையெல்லாம் பொன்னாகும் என்று ஆதாரத்துடன் சொல்லுங்கள். அதை விட்டு பிரிவினை என்று பேசி குரங்காட்டங் காட்ட வேண்டாம்; மக்கள் குழந்தைகள் அல்லர்!!

"கூட்டத்தை விட்டுப் போனால், இரத்தம் கக்கிச் செத்துப் போவீர்கள்" என்று நடுத் தெருவில் வித்தை காட்டும் தாயத்து வியாபாரியைப் போல், பிரிவினை என்று மிரட்டி அரசியல் வித்தை காட்ட வேண்டாம்!!

இரண்டொன்றை மஞ்சள் என்றால் எல்லாரும் ஏற்பர்; ஆனால், எல்லாமே மஞ்சள்; நீயும் மஞ்சள், நானும் மஞ்சள் என்றால் கண்ணிலே காமாலை நோயே தவிர வேறல்ல என்று விலா நோகச் சிரிப்பார்கள்.

தியாக பூமிக் காமாலைக் கண்ணர்களே! கண்டதையெல்லாம் மஞ்சள் என்னாதீர்கள்!! மாநில சுயாட்சியை மறந்தும் பிரிவினை என்று பேசாதீர்கள்!! *

தம்பி! 1961-ஆம் ஆண்டுக்கான திட்டம் இதுதானு?

தி. மு. கழகம் துவக்கப்பட்டதும் இது முளை விடாது என்று பயம் காட்டினர், அரசியலில், 'மிட்டா மிராசுபாத்யதை' கொண்டாடும் போக்கினர்.

தி. மு. கழகம், முளைவிட்டது; வளர்ந்தது, பசுமைபாங்காகத் தெரிந்தது.

தி. மு. கழகம், நாலு நாள் கூத்து; ஆடிஅடங்கிவிடும், ஆருடம் கேளும் என்ருர், அரசியலை நடாத்தும் அருங்கலையில் வல்லவர்கள் யாமே என்றுஆர்ப்பரிக்கும் போக்கினர்.

தி. மு. கழகம் ஆண்டுக் காண்டு 'புதுப் பொலிவுபெற்று - வளர்ந்து வரலாயிற்று.

ஏழெட்டுப் பேர்வழிகள் எங்கும் சுற்றி, என்னமோ கழகம் என்று பேசுகின்ருர்; ஈதல்லால் இவரின் பக்கம் எவர் சேர்வர், கூறும் என்று, எல்லோர்க்கும் தாமே வழி காட்டி என்று எண்ணிக்கொண்டோர் ஏளனம் கூறி நின்ருர்.

தி. மு. கழகமே எமது இடமாகும் என்று, உழவர் முதல் சிறு வணிகர்வரை கூறலானுர்; மாணவரும், நாட்டின் மாண்பு காக்க இப்பாசறையில் யாம் சேர்வோம் என்று வந்தார்; ஆலை களில் வேலை செய்யும் பாட்டாளித் தோழர் அருங்கலைகளில் ஈடுபட்டு ஏற்றம் பெற்ருர் அன்ன வருமே, இது எங்கள் கழகம் என்று இடம் பெற்று உயிருட்டம் தந்தனர்: வரலாறு அறிந் தோரும் வந்தார் இங்கு: தமிழர் வாழ்ந்த விதம் கூறி நின்ருர் புலவர் பல்லோர்; கவி வல்லோர், இசைவாணர் துணைநின்ருர்; கவர்ச்சிமிகு வடிவுடன் கழகம் மிளிர்ந்ததாங்கே.

> **19 - 2' – 61**-இல் எழுதப்பட்ட இம் மடல், இன்றைக்கு நாம், நம்மை எப்படி மாற்றிக்கொள்ள வேண்டும் என்று எடுத் துக் காட்டுகிறது.
>
> பிரிவினையை இன்று நாம் விட்டு விட்டோம்;
>
> பிரிவினை கேட்டுவந்த காலத்தில் எழுதப்பட்டதனுல், சில இடங்களில் அது பற்றி வலியுறுத்தப்பட்டாலும், பிரிவினை உணர்வைத் தூண்டுவதற்கு இதனைப் பிரசுரிக்கவில்லை என்பதையும் தெளிவு படுத்துகிறேம்.—ஆசிரியர்.

ஆமப்பா! இதுகளுடன் யார்தான் சேர் வார்? அன்னக் காவடிகள் ஐந்தாறு சேரும்; ஆடிப் பிழைப்போரும் பாடி வாழ்வோரும் கூடினர் அங்கு என்ருல், ஆவது என்ன அவ ரால்? பேசுவர் சுவைசொட்ட, வேறென்ன இய லும்; சாயம் பூசுவர், ஆடுவர் நாடகம்; கண் டோர்க்குச் சிரிப்பு மூளும், அஃதே யன்றி, கிளர்ச்சி செய்ய வல்லவரோ கழகத் தோழர்! கிண்கிணியும், கழ லாமோ, கூறும் என்று கேட்டுவிட்டு இடிச்சிரிப்பைக் காட்டி நின்ருர், எவ ருக்கும் திறம் இல்லை, தீரம் இல்லை என்று கூறும் மேலோர்!

நாட்டினிலே உள்ள இழிவுதனைத் துடைத்திடத்தான், நாங்கள் எங்கள் குருதியையும் தருவோம் என்று சூளுரைத்துக் கிளர்ந்தெழுந்தார், கழகத் தோழர்; சுடுசொல்லைத் தாங்கி நின்றார், துவளவில்லை; கடுஞ்சிறைக்கு அஞ்சி அவர் ஒளியவில்லை, கைகால் கண் போயினும் கலங்கவில்லை; இன்னுயிரே போயிற்று, வீரம் மட்டும் இம்மியளவும் குறைவாகிப் போகவில்லை; வீறிட்டுப் பாய்ந்துவந்த விடுதலை வேகம் கண்டு கைபிசைந்து நின்றார் காங்கிரஸ் ஆட்சியாளர்தானும்.

ஈதென்ன பெருவீரம்! சிறையுள் சென்று இருந்துவிட்டு, வெளிவந்து பேசுகின்றார். கிளர்ச்சி எனில் தக்கதோர் நியாயம் வேண்டும்; எடுத்ததற்கெல்லாம் எதிர்ப்புக் காட்டி வந்தால், எவர் இவரை மதித்திடுவார், கூறும், நாடு ஏற்கும் திட்டம் உண்டு என்றால், நல்லபடி அதனை எடுத்துரைத்து, மக்களிடம் ஒப்பம் பெற்றாலன்றோ, மதித்திடுவர் மாநிலத்தில் உள்ளோர் எல்லாம்; இங்கிதமான இம்முறையை விட்டு எதற்கெடுத்தாலும் ஒழிக! ஒழிக! என்று இரைச்சலிட்டுப் பலன் என்ன? என்று பேசிக், குன்றனைய மதிபடைத்தோர் போலக் கோலம் காட்டி நின்றார் காங்கிரஸ் ஆட்சியாளர்.

சிறை செல்ல மட்டுந்தான் தெரியுமென்று எண்ணற்க; நெஞ்சத்துள்ள சிறைக்கதவு தான் திறந்துவைக்கும் அந்தத் திறமும் எமக்கு உண்டு என்று, செப்பியே கழகத்தார், சுற்றிச் சுற்றி, விளக்கமெல்லாம் அளித்தார் விடுதலைப் போரினைப் பற்றி; வீழ்ந்துபட்ட திருஇடமும் மீண்டும் வெற்றிக் கொடி நாட்டி எழுந்திடவே அறப்போர் காணீர் என்றார்; திட்டமெது என்பீரேல், ஒன்று உண்டு; அதனுள்ளே பலப் பலவுமான திட்டம். ஆலின் விதைக்குள்ளே பல்லாயிரம் இருப்பதுபோல உளது என்று, அறைந்தனர் மாற்றார் அதிரும்வண்ணம், திராவிடநாடு திராவிடர்க்கே எனும் முழக்கம்.

முழக்கமாம், முழக்கம் கேட்டீரோ! இவர் எழுப்பும் முழக்கமெலாம், நாடகம்தான், வேறென்றில்லை! பழம் பெருமை பேசுகிறார் பார்த்தவர்போல்; படக்காட்சி காட்டுகின்றார் திராவிடம் என்பதாக; நாடகமாடிடும் இவர்கள்தானோ நாடாள வருவார்கள், முறையோ என்று, நாப்பறையை எழுப்பி நின்றார், நாடாளும் நப்பாசை கொண்டோரெல்லாம்.

நாடகமும் படமும், தொழில்; அறிவீர் ஐயா! நல்ல அந்தத் தொழிலும் நெஞ்சை அள்ளும் திறமுடைத்து; எள்ளி நகையாடும் ஏந்தலெல்லாம், வெள்ளையரை எதிர்த்த காலை, வேண்டிப் பெறவில்லையோ, கலைஞர் தொண்டு!—என்று கழகத்தார் கூறிக் காத்தார், கலையினையும் அஃதளிக்கும் கருத்தோட்டத்தையும். கலைஞர் எனில், எங்கிருந்தோ வந்து சேர்ந்த வியப்பளிக்கும் பொருளல்ல, அவரும் நம்மில், ஓர் அங்கம் அறிந்திடுவீர், அவர்க்கும் உண்டு அன்னை மொழி காத்திடும் உரிமைதானும்; நாடு நமதாக வேண்டும் என்று நல்லோர்கள் கிளம்பிப் போர் புரியும் காலை, நாடகம் நடாத்திடுவோர்க்கும் வேலை உண்டு என்றும் கூறி, நமது கழகத்தோரும் நாடகமே ஆடி மகிழ்வித்தார்கள், நாட்டவரை, கலைஞரையும் கூடத்தானே!

கலை உலகு உமதே என்று கருவம்கொண்டு அலைகின்றீர்கள்; காட்டுகின்றோம் எமது திறம் பாரும் என்று, கதருடைய கலைஞர்களை அழைத்துவந்து, கண் சிமிட்டி நின்றார் காங்கிரஸ் அமைச்சரெல்லாம்; காட்சி கண்டு, கலகலத்துப் போகும் கழக அணி என்றார்.

கலையுலகில் கீர்த்திபெற்ற தோழரெல்லாம், பாடி மகிழ்விக்க மேடை வந்தாரில்லை, கழகம் காட்டும் பாதையினை மற்றவர்க்கு எடுத்துரைக்கும் பணி மேற்கொண்டார்; திருஇடத்தின் சீரெல்லாம் படித்துணரத் தலைப்பட்டார்கள்; வெறும் சிரமசைக்கும் பதுமைகளாய் இல்லை; சிறையும் செல்ல முன்வந்தார்; முக்காடிட்டு ஓடவில்லை; கழக அணி தன்னில் இவர் சேர்ந்த பின்னர், கலைத்துறையில் பணி பலவும் செய்யும் தோழர், பாட்டாளிகள் பலரும் வந்து சேர்ந்தார்; விடுதலைக்குப் பாடுபட முனைந்து நின்றார். கலையுலகில் நிலைபெற்றோர் கழகமதில் வந்ததாலே, கலையுலகப் பிரச்சினையை அலசிப் பார்த்து, எமது நிலை உயர வழிகோலக் கழகம் என்னென்ன திட்டங்கள் சொல்லும் என்று கேட்டு அவர்கள் இருந்தார் இல்லை; எமக்கு என்று ஏற்பட்ட தொழில் கலை; எனினும் அஃதும், எமது கழகம் காட்டும், வழி நடக்கத் துணை நிற்கும் என்பதால் தான் இருக்கின்றோம் அத்துறையில் தானும் என்றார். அர்ஜுனனாய் வேடமிட்டு அளிப்பேன் இலட்சம் என்றுரைக்கும் முதலாளியின் முகமும் கண்ட, எமது பணி விழைவீரேல், இதனைக் கேளும்; எமது கொள்கைக்கு ஊறு நேராவண்ணம் இருந்தாலன்றி, படமதனில் நாங்கள் நடிக்கமாட்டோம்; நாங்கள் படத்தொழிலுக்காக மட்டும் உள்ளோம் அல்லோம்; பாங்கான திராவிடம் காணும் நோக்கம் கொண்டுள்ளோம். அறிந்திடுவீர் என்று சொல்லி, பண்பு காத்தார்.

ஈதெல்லாம் கிடக்கட்டும்! சேதி கேளீர்! இவர்க்குள்ளே எத்தனையோ, பிளவு. பேதம்! ஆளுக்கோர் திட்டம், மட்டம், அநியாயம், வெளியே தெரிந்தால் போதும்! இவருக்கு அவர்தான் மேல், அவருக்கு இவரே நிகர் என்றெல்லாம் எத்தனையோ பேச்செல்லாம் எழுந்திட்டது அங்கே. இனி அவர்கள் ஒன்றாக இயங்கமாட்டார்! பிய்த்துக்கொண்டு ஓடுவார் பாரீர் என்று, பேயுள்ளம் கொண்டோர் பேசி வந்தார்.

பேச்சுகளில் எழுத்துகளில் பேதம் தேடி அலைகின்றீர் பித்தர்களே! கருத்துத் தோட்டம், ஓர் மலர்தான் இருக்கும் இடமாகாது; வண்ணப் பூ வகை வகையாய் இருக்கும் ஆங்கே! சிரித்திடும் முல்லைக்கும் சிங்கார ரோஜாவுக்கும், பறித்தெடுக்காமலே பார்த்து மகிழத்தக்க பாங்கான தாமரைக்கும், பகைதான் என்று, பேசுவது அறிவீனம் அன்றோ. சேர்ந்து பணியாற்றிடும் காலை, செயல் முறைகள் பலப்பலவும் பேசிடல் வேண்டும்: சீற்றம் எழத்தக்க நிலையும் வரலாம்; சிண்டு முடித்திடுவோர் முந்திக்கொண்டு, மனத் தாங்கலாக்கி மகிழ்ச்சி வெறி கொள்வர்; எனினும், எமது இலட்சியமாம், திராவிட நாடு திராவிடர்க்கு என்னும் பிணைப்பு, எமக்குள் முறிவுகளைத் தாராது காணீர் என்று சூளுரைத்துக் கழகம் வளர்ந்தது; சூது மதியினருக்குக் கிலியூட்டிற்று.

உருட்டு விழி, மிரட்டும் பேச்சு கொண்டோரன்றோ? இவரால் ஊர்க்கலகம் மூளும், பிணமும் வீழும். பேச்சோடு நின்றிடும் பேர்வழிகளல்ல, பெரும் போர் மூட்டி, நாட்டை இரத்தக்களரியாக்கிப், பேயாட்டம் ஆடத்தான் படை சேர்க்கின்றார்கள். அறவழியில் இவர் நின்று பணியாற்றார்—அனைவருக்கும் ஆபத்துத் தேடும், பயமளிக்கும் பலாத்காரம் அவிழ்த்துவிட்டு, படுகளமாக்குவார், நாட்டை, பாரும் என்றார்.

கொன்று குவித்துக் கொடி நாட்டிடும் கொடிய முறை எமதல்ல, கூறிவிட்டோம். கூர்வாள் ஏந்திக் குத்திக் குடலெடுக்க முனைந்தோமில்லை—எதிர்ப்படுவோர் எங்கிருந்தோ வந்த வேற்று நாட்டாரல்ல; விலங்கணிந்தும் உணராது உழலும் எமது உடன் பிறப்பாளர் அன்றோ அவர்களும்தான்; ஒருவருக்கொருவர் வெட்டிக்கொண்டு வீழும் அந்த வேட்டு முறை அல்ல, நாங்கள் கொண்ட முறை அறிவீர் என்று கூறி, குத்துக்கும் வெட்டுக்கும் ஆட்பட்டுக் குருதி கொட்டி, கொடிய செயலில் துளியும் இறங்காமல், கொள்கை கூறி, கண்ணீர்த்துளிகள் நாட்டின் கண்மணிகள் என்று பாராட்டும் நிலையினைக் கழகம் பெற்று, பாமரும் பற்றுக் காட்டும் ஏற்றம் கொண்டது.

வேட்டுமுறை அல்லவோ உமது! பிழைத்தீர், பயல்காள்! இல்லையென்றால், கூண்டோடு பிடித்தழித்துப் போட்டிருப்போம், தப்பிவிட்டீர். சரி, போகட்டும். வேட்டு முறை வேண்டாம் என்று கூறிவிட்டீர். வேறென்ன முறை உமக்கு? உண்டோ? கூறீர்! என்று காங்கிரசார் கேட்கலுற்றார்.

வேட்டுமுறை ஆகாது; மரபுமல்ல என்பதனால் அதைவிடுத்தோம்; அஃதும் இன்று இக்கழகமதை நடாத்திச் செல்வோர், இம்முறை ஆகாது என்பதால், எழவில்லை. வேட்டுமுறை தன்னாலன்றி வேறெதாலும் விடுதலையும் கிடைக்கப்போமோ என்று கேட்கும் வீர மிகு போக்கினர்க்குக் குறைவில்லை, அறிவீர் நன்றாய். ரசறைகள் அமைத்தும் பதுங்கிப் போர்ச் செய்தும், வெடிகுண்டுகள் செய்தும், விரைந்து தாக்கிடும் வழி நடந்தும், வடவரின் ஆதிக்கத்தை அழித்தொழிக்க வேண்டும் என்று. விடுதலைப்போர் வரலாற்றுச்சுவடி காட்டும், சுவைமிக்க சேதிகளை நெஞ்சில்கொண்டு, செயல்புரியத் துடிதுடித்து நிற்போர்கள் அறவே இல்லை என்று எண்ணற்க, அவர்கள் இன்று, அந்த முறை ஆகாது என்றுகூறும், எண்ணத்தாரிடம் கழகம் இருக்கட்டும் சின்னாட்கள் என்று உள்ளார். எந்நாளில் அவரிடம் கழகம் சேரும் என்பதைக் கூற வல்லோர் அவருமல்ல; உமது ஆணவத்தின் போக்கே, அந்நாளை விரைவாகக்கொண்டுவந்து விடக்கூடும். அறப்போரிட்டு வெற்றிபெற விழைவோர்கள் கழகத்தை நடத்தும் பொறுப்பிலுள்ளார். இந்த உண்மையின் அருமையினை உணராமல், ஆணவத்தால் அடக்குமுறை அவிழ்த்துவிட அவிழ்த்துவிட, அழிவு முறையன்றி வேறொன்று ஆகாது என்று ஆர்த்தெழுவர் பல்லோர்கள், அறிவீர். இன்று வேட்டுமுறை இல்லை, ஓட்டுமுறை மேற்கொண்டுள்துளாம் என்று அறிவித்திருக்கிறது நம் கழகம், ஆளவந்தார்க்கு.

ஓ! ஓ! ஓட்டு முறையோ; உமது! மெத்தச் சரி! களத்துலே காட்டுங்கள் கைவரிசை பார்ப்போம் என்று, காங்கிரசார் பெருங்கூச்சலிட்டார். சிரிப்பினூடே; தேர்தலிலே வல்லவர்கள் என்ற பட்டம், தேசத்தார் சூட்டிவிட்டார் என்பதாலே, தேர்தலிலே

செங்கை மாவட்டத்

தி. மு. க. மாநாடு...!

—

மாநகர் காஞ்சி அன்று
  மகிழ்ச்சியில் மூழ்கிற் றம்மா!
மாநில முதல மைச்சர்
  மாநில சுயாட்சி கேட்டார்!
தேநில வெழுந்தாற் போலச்
  சிந்தையில் ஒளியைப் பெற்றார்!
ஆநிரை அனுப்பிப் போர்க்கே
  ஆயத்த மானார் அம்மா!

நாவலர், எம். ஜி. ஆரர்,
  நல்லமைச் சர்கள், மற்ற
காவலர், கே. டி. எஸ். ஸார்,
  தி. சு. இலட்சுமணன், கோபால்,
மேவிய மூ. சி., பால
  கிருட்டிணன் மேலோர் எல்லாம்
தாவியே அவர்பின் சென்று
  தடந்தோளைப் புரட்டி நின்றார்!

கழகத்து மணிகள் நெஞ்சம்
  களத்தினை எண்ணித் துள்ளும்!
பழந்தமிழ் நாட்டைக் காக்கப்
  பாய்ந்ததே உணர்ச்சி வெள்ளம்!
கொழுந்துவிட் டெரிக அண்ணா
  கொள்கைகள்! முதல்வர் வெற்றி
தழுவுக இன்று! நாளை
  தனித்தமிழ் நாட்டைக் காண்போம்!

—இராதாபாய் ஆறுமுகம்.

நிற்பாராம். கேளீர் ஐயா! தெருமுனையில் பேசுவர், கேட்பர், மக்கள். பொழுதுபோக்குப்பல உண்டு, இவர்கள் தருவதுபேச்சுக்கச்சேரியன்றோ! இதனைக் கண்டு, மதிமயங்கிப் போனதாலே, இவர்கள் பாரும், தேர்தலிலே நிற்பாரம்! ஐயோபாபம்! தூள் தூளாகிப் போவர், பின்னர், கழகம் இருந்த இடம் புல் முளைத்துப்போகும். சரியான அடி கொடுத்துத் தரைமட்டமாக்கிடாவ வந்தது சமயம், ஜெய்இந்த் என்று கொக்கரித்துக் கிளம்பினர் கோலேந்திகள், புதிய தெம்புடன்.

எப்புறமும் இத்திறத்தார் எதிர்த்தகாலை, எதைக் கண்டு இவர்கள் துணிவு பெற்றார் என்று அவரெல்லாம் ஏங்கும் நல்ல பிரசாரம் நடாத்தி, வீடெங்கும் கழகம்பற்றிப் பேசுவோர்கள் கூடக்கண்டு, விறுவிறுப்பாய்ப் பணியாற்றி வெற்றிதேடப் பாடுபட முனைந்தது. அந்த நாளில் எவர் கலைஞர் எவர் வழக்கறிஞர், என்ற பேச்சு எழவே இல்லை. கலையுலகில் இருந்த இராஜேந்திரன் தானும், கடும் எதிர்ப்பு மூண்ட தேனி களத்தில் நின்று போட்டியிட்டார். மற்றக் கலைஞரெல்லாம், நாளெல்லாம் சுற்றிச்சுற்றி, கழக வெற்றிக்கு உழைத்தார். ஓட்டுப் பெறுவதென்பது விளையாட்டல்ல; ஒன்றல்ல இரண்டல்ல நாங்கள் கண்ட தேர்தல்; மன்னாதி மன்னனெல்லாம் மண் கவ்வச் செய்தவர்கள்; எம்மை இந்த மரப்பாச்சிகளோ எதிர்த்து வெற்றிகொளப் போகிறார்; கதை எழுதும் கருணாநிதியும், கவிபாடும் கண்ணதாசனும், படக்காட்சிக்குக் கதை எழுதிடும் அண்ணாத்துரையும், எமை எதிர்த்து நிற்கப்போமோ என்றெல்லாம் ஏகி வந்தார் இறுமாப்பு மிகக்கொண்டோர்; மக்களோ, சீராட்டி வரவேற்று, நமக்குப் பரிந்து வாக்களிந்தார்; பதினேழு இலட்சம் வாக்குகளை நம் கழகம் பெற்றது; ஆட்சிமன்றம் சென்றமர்ந்தனர் நம்மவர்.

எப்படியோ பெற்றுவிட்டார் வெற்றி, அதனால் என்ன? எம்மிடமன்றோ ஆட்சி! இதுகள் பாரீர், எம்மெதிரே இளித்துக் கிடக்கும் காட்சி. எவரெவரோ எமை எதிர்த்தார், இன்று அவரெல்லாம், ஏங்கித் தவம் இருந்து எமது அருள் வேண்டுகின்றார்! பக்குவமில்லாதார், பாலபருவம் அரசியலில், பாகு தெளித்த மொழி பேசினாலே போதும், பாதம் பணிந்திடுவார்; சில நூறு ரூபாய்கள் பெறவல்ல வேலையோ, பலஆயிரம் தரும் வியாபார அனுமதியோ, ஏதேனும் சுவை, இலாபம், காட்டினால் போதும், கழகம் கலைத்துவிட்டு, எம் கால் வீழ்ந்து கிடப்பார்கள; உழைப்பாளிக் கட்சி உருக்குலைந்துபோன கதை உலகறியுமன்றோ! பொதுநலக் கட்சிதானும் போதும் ‘கடை’ என்று கூறி, எம்மிடம் அடைக்கலம் ஆகிவிட்ட, ‘சேதி’ அறியீரோ? பொறுத்திருந்து பாரும், இதுகள் போக்குப் புரிந்துவிடும் என்றுரைத்து வந்தார், கேட்போர் எரிச்சலடையும் வண்ணம்.

கழகத் தோழர்களோ, ஆட்சிமன்றம் அமர்ந்தாலும்ஆளடிமையாகாது, கொள்கை பிறழாது’ நோக்கம் மாறாது, திருஇடத்தின் விடுதலைக்குப் பாடுபட, போர்முனைகள் பல உண்டு, அதிலே இஃதொன்று; இங்கு வந்து அமர்ந்ததனால், இல்லை இனி வேலை என்று எவர் எண்ணிக்கொண்டாலும், ஏமாளியே அவர்கள், என்று கூறிவிட்டு, மேலும் சுறுசுறுப்பாய், நாடு சுற்றி நடத்தி வந்தார், நம் நாட்டு விடுதலைக்கு, போரார்வம் வளர்ந்திடவும், புத்தார்வம் பூத்திடவும், பெர்மிட்டு, லைசென்சு, காண்ட்ராக்ட், கையூட்டு, என்று பல உண்டு, அறமழிக்கும் முறைகள். இன்றுவரை எவரும், நம் தோழர் குறித்து, எந்த, ‘மாசுமருவும்’ எடுத்துக்கூற இயலாமல், தூய பணியாற்றித் தோழர்கள் வருகின்றார்.

தீர்ந்ததப்பா, தீப்பொறி கொட்டும் வேலை! இனி, திண்டுதனில் சாய்ந்து சில பேசிக் கிடப்பார்கள். போராற்றல் இனி இல்லை; நெஞ்சம் துருப்பிடித்துப் போன நிலை. முழக்கமிட்டுவந்ததெல்லாம் இந்தஇடம் பிடிக்கத்தான், அதனால் இனி இவர்கள் ஒடுங்கிக் கிடப்பார்கள், என்று பேசி மகிழ்ந்தார், நீறுபூத்த நெருப்பாகிக் கழகம் இருக்கும் நிலை உணராதார்.

அதுவும் தவறென்று காட்டுவதற்கான வாய்ப்புக் கிடைத்திட்ட போதெல்லாம், கிளர்த்தெழுந்து நின்றார்கள், கழகத்துத் தோழர்கள். கருப்புக் கொடி காட்டும் நிகழ்ச்சியே ஓர் காவியம்போல், வடிவெடுத்தது. நம் கழகத் தோழர்களின் வீரத்தின் விளைவாக இந்தி வந்துவிடும் என்ற நிலை பிறந்தஉடன், எங்கே? எங்கே? என்று ஆர்த்தெழுந்தனர், வீரர். வீரம் குன்றிவிடும், இயல்பே மாறிவிடும், சட்டமன்றம் சென்றதனால் என்றன்றோ நாமெண்ணி, ஏமாந்து போயிருந்தோம், இந்தக் கழகத்தாரோ இம்மியும் வீரமதை இழந்திடக் காணோமே! ஏதேது இவர் போக்கு, அதிசயமாய் இருக்குதென்று மாற்றார்கள் மனம் மருளும் நிலை எழ உழைக்கலானோம்.

அழிந்துபடதக்க நிலை பலவும் தாண்டிவிட்டார், அடித்துக்கொண்டு சாவர் என்றிருந்தோம், பிழைத்துக் கொண்டார்’ இடம் பிடிக்க இவர்க்குள்ளே எழும் பூசல் என்றிருந்தோம், எப்படியோ எதனையும் இலகுவாகத் தீர்த்துக்கொண்டு, ஏறுநடை போடுகின்றார். இன்னும் எத்தனை நாள்? எதுவரையில் இந்நிலைமை? எப்போது பிளவு வரும்? என்று நோட்டமிட்டு, வட்டமிட்டபடி, கழுகு, பிணம் வீழாதா என்றேங்கும்பான்மைபோல, சுற்றித் திரிகின்றார், மோப்பம் பிடித்தபடி. நம்மில் துளியேனும் பேதம் ஏற்பட்டால், சந்துகளில் நுழையும் சர்ப்பம் போலாகிவிட, சந்தர்ப்பம் பார்த்தபடி இருக்கின்றார், மாற்றார்கள்; இன்று இவர்க்கு இருக்கும் வலிவுக்குக் காரணமே, இவர்க்குள்ளே இருக்கின்ற, பாசம்தான், வேறில்லை; எப்பாடுபட்டேனும் இப்பாசம்தனை ஒழித்தால், பிறகு, சாந்து அழிந்த சுவர், சரிந்துபோவதுபோல், இவர்கள் அணிவகுப்பு, அழிந்துபோகும், நிச்சயமாய்; எனவே, இம்முனையில் இறங்கி வேலை செய்தால், வெற்றி நிச்சயம் காண் என்று வெறிக்கொண்டு, மாற்றார் உலவுகின்றார், மரபு அழிக்கத் துடிக்கின்றார், புத்தம் பிதுப் பிரச்சினையோ, பழங்காலப் பிரச்சினையோ, தத்துவம் கிளப்புகின்ற பூசலோ புகையோ, தரம் என்ன என்று கேட்கும் தத்தளிப்போ, ஏதோவொன்று, இன்று நமக்குக் கிட்டாதா? எடுத்ததனைப் பெரிதாக்கி, ஊருக்கெல்லாம் காட்டி உருவழிக்க முயல்வேனே! வருகிறதே பொதுத் தேர்தல், வளருகிறதே கழகம்!! மேலிடத்தார் கேட்கின்றார், என்னதான்செய்கின்றீர்? இவ்வளவுதானோ திறமை? என்றெல்லாம். எனவே ஏதேனும் செய்து இவர்தம் ஒற்றுமையைக் குலைத்துவிட, நாளும் வழிதேடி, நாமிருக்க வேண்டுமென்று, நாடாளும் நிலை இழக்க நேரிடுமோ என்பதனால் நடுக்குற்றுக் கிடக்கும், காங்கிரசார் எண்ணுகின்றார். நாம், கழகத்தின் வடிவம் மாற்றிட முனைந்தாலும், கட்டுப்பாடு ஒழுங்கு காத்திடப் பணி புரிந்தாலும், செம்மைப்படுத்த செயல் முறை புதிதாய் வகுத்

தாலும், எவரெவர்க்கு என்ன இடம்? எவரெவர்க்கு என்ன பணி? எவரெவர் தொண்டாற்றி ஏற்றம் அளிப்பவர்கள்; எம்முறையில் உள்ளோரைத் தலைமை இருக்கைக்கு ஏற்பது எனும் எதுபற்றி முயன்றாலும், மூச்சைச் சூறாவளி என்றாக்கி, பேச்சைப் பெரும்புயல் என்றாக்கி, நமக்குள் பேதத்தை வளர்த்துவிட்டு, பெரும் பிளவு உண்டாக்கி, உடைத்துக் காட்டி விட்டு, ஊராள்வோர் உட்கார்ந்து, ஓஹோ! பார்த்தீரா? பன்னிரண்டுஆண்டுகளாய், பயல்கள் இறுமாந்திருந்தார்; பலப் பல முயற்சிகளைப் பக்குவமாய் முறியடித்தார், என்றாலும் இறுதியிலே, உடைத்தெறிந்தோம் அவர் அமைப்பை; சிதறியது கண்டவர்கள், கண்ணீர் சிந்திக் கிடக்கின்றார்; இனி இது போல் ஓர் அமைப்பு, எவர் முயன்று ஆக்கிடுவார்; பயமின்றி நாமினிமேல் வாழ்ந்திடலாம், என்று பாடிடவும் ஆடிடவும், ஆவலுடன் உள்ளார்கள் மாற்றார்கள்.

இதை அறிந்து, நாம் நடந்துவந்த அந்த நீள் வழியையும் நினைந்து, எதிர்ப்பட்ட ஆபத்தை எத்திறத்தால் வென்றோம், ஏளனப் பேச்செல்லாம் எவரெவர் கூறி நின்றார், என்னென்ன பேச்செல்லாம் மாற்றார் உரைத்தார்கள் — சின்னப் பிள்ளைகள் என்றார், சினிமாக் கட்சி என்றார், கூத்தாடும் கும்பல் என்றார், தடி கண்டால் ஓடும் என்றார், சுகபோகம் தேடிடவே சூது நடத்துவோர் என்றார், குடும்பத்திலுள்ளாரைக் குறை கூறாதும் இருக்கவில்லை; என்னென்ன ஏச்சுக்கள்; எவரெவரின் இழிமொழிகள்; இவனுக்கு இந்த வாழ்வு எப்படி வந்ததென்ற கேள்விகள், கேலிகள்; அடுக்கடுக்காய் அத்தனையும் ஆண்டு பல கேட்டோம்; இதயத்துக்கு வீழ்ந்த அடி ஒன்றல்ல இரண்டல்ல; எதையும் தாங்கியது, எற்றுக்கு என்பதனை எண்ணிப் பார்ப்போருக்கு, இன்று எழுந்துள்ள நிலைமையினை உணர்ந்து தெளிவு பெற இயலும், எதிர்வீட்டுப் பலகணியை எட்டிப் பார்க்கும் போக்கு, நல்லது அல்ல; தீது! ஆனால், மாற்றார்க்கு இன்று அதுவே, பொழுதுபோக்கு!! இலாபமும் அதில் அவர்க்கு உண்டு! நாம் இன்று, எண்ணிப் பார்க்க வேண்டியது ஒன்று உண்டு. கழகத்துக்குப் பெரும் விபத்து வந்துவிட்டது என்று கூறித் திரியும் காங்கிரசாரின் பேச்சிலிருந்து நாம் என்ன பாடம் தெரிந்துகொள்ள வேண்டும்?

உள்ளூர்க் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து, உச்சக் கட்டம் வரையிலே, 'கோஷ்டிகள்' உள்ளன, என்று நேரு பண்டிதர் கூறுகிறார்; வருந்துகிறார்.

வீட்டுக்குள்ளே ஏற்பட்டுவிடும் 'விரசமான' விஷயத்தை வெளியே சென்று பேசாதீர்கள் என்று காங்கிரஸ் தலைவர் தாக்கீது பிறப்பித்துள்ளார்.

காலக்கோடுகள் வீழ்ந்து வீழ்ந்து, நரை திரை மேலிட்டுள்ள பருவத்தில் உள்ளது காங்கிரஸ் கட்சி —அந்தக் கட்சியிலேயே 'கோஷ்டிகள்' கூடாது. அது ஆபத்து, என்று உணரப்பட்டு வருகிறது.

தத்துவப் பூசல்கள் என்று எடுத்துக்கொண்டால், கூட்டுப் பண்ணையிலிருந்து கூடி வாழும் கொள்கை வரையிலே, இரண்டு காங்கிரஸ்காரர்கள் ஒருமித்த கருத்துக் கொண்டில்லை. ஆனால் இன்று; நம்முடைய வீட்டு விவகாரம்தான், பருந்து அடித்துக்கொண்டு வந்து கீழே வீழ்ந்த பழத்தைக் காக்கைகள் கொத்திக்கொண்டு கிடக்கும் நிலைமைக்குக் கொண்டுவரப்படுகிறது. சரியா? முறையா? 1961ஆம் ஆண்டுக்கென்று, நாம் அரும்பாடு பட்டுத் தேடிக் கொள்ளும் திட்டம் இதுதானா?

தம்பி! எண்ணிப் பார்த்து, எமக்கு நல்வழி காட்டு.

அண்ணன்,

அண்ணாதுரை

"கொஞ்சம் சொல்லேன்!"

(சீவ. நடராசன்)

★

முத்தாகப் புன்னகையைச் சிதறவிட்டு
முழுமோகச் சிறைக்குள்ளே அடைத்துவைக்கும்
சத்தானச் செய்கையினை நாளுக் கொன்றாய்
செய்துவரும் சிற்றிடையே நீயெனக்குச்
சொத்தாக என்றாவாய் சொல்லேன் கொஞ்சம்;
சோகத்தை நான்நித்தம் தழுவ லாமா?
பித்தானேன் உன்மேல்நான் என்றே ஊரார்
பிதற்றுவதை என்றைக்கு மெய்யாய்ச்செய்வாய்!

ஆற்றோரம் நீநடக்கும் அழகைப் பார்த்து
ஆசையெல்லாம் நெஞ்சத்தில் தேக்கி நின்றேன்!
காற்றோடு உன் ஆடை ஊடல் செய்து
கள்வெறியில் மிதக்கையிலே கவலை கொள்வேன்!
ஊற்றாகப் பெருக்கெடுக்கும் நீரைப்போல
உள்ளத்து உணர்ச்சிகளின் பொறுமல் கண்டு
ஆற்றாது அழுகின்றேன் என்றே உந்தன்
அகத்தினிலே இடமளிப்பாய் கொஞ்சம்
சொல்லேன்?

ஊர்கூட்டிப் பொதுநீதி பேசும் காலம்
ஓடோடிப் போயிற்று இன்று இல்லை;
யார்கூட்டி வந்தார்கள் என்றே சாதி
ஆதிக்கம் பேசிடுவோர் மறைந்தே போனார்!
பார்கூட்டிப் பகுத்தறிவை ஏற்கும் நாளில்
பாவையேநாம் காதலித்தோம் ஒன்றோ
டொன்றாய்
பேர்கூட்டிப் பொறித்திடுவோம் காதலேட்டில்
பொன்னாட்சி என்றென்றும் வாழ்க என்றே.

செயல்படச் செய்வது எந்நாளோ?

(மா. அரங்கசாமி)

நமதருமை தாழ்த்தப்பட்டோரின் தனிப் பெருந் தலைவர் டாக்டர். அம்பேத்கார் அவர்கள் மறைந்து இன்றையதினம் பதினாறு ஆண்டுகளாகி விட்டன.

என்றாலும் அவர் நினைவைச் சொல்லும் முகத்தான் ஒவ்வொரு ஆண்டும் அன்னாரின் பிறந்த தின விழாவானது பட்டி தொட்டி முதல்—நாடு நகரம் வரை வெகு கோலாகலமாகக் கொண்டாடப் படுகிறது. அவர் மட்டும் பிறக்காதிருந்தால் இந்தியாவிலிருக்கும் பத்துக் கோடிக்கு மேற்பட்ட "தாழ்த்தப்பட்டோரின் நிலை" பரிதாபகரமாகத்தான் இருந்திருக்கும்: ஏன், எடுப்பார் கைப்பிள்ளையாகத்தான் போயிருக்கும்!

அது மட்டுமல்ல; டில்லி ஆதிக்க புரியினருக்கே நல்லதொரு அரசியல் சட்டம் கிடைத்திருக்காது என்றுதான் சொல்ல வேண்டும்.

அப்படிப்பட்ட பெருமையுடைய "அறிவுலக மேதை அம்பேத்கார்" தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்காக பட்ட பாடுகள் கொஞ்சமல்ல; ஆம், தனது வாழ்வையே பனயம் வைத்து அர்ப்பணித்துக் கொண்டார் என்றுதான் சொல்ல வேண்டியுள்ளது.

மாநிலம் போற்றும் அம்மாமேதையின் மணிவாசகங்கள் அனைத்தும் வாயளவில்தான் இருக்கிறதே யல்லாமல், செயலில் செய்துகாட்ட சாதி இந்துக்கள் பயப்படுகிறார்கள்.

மதம், குலம், கோத்திரம் என்ற மூடநம்பிக்கைகளைத்தான் இன்றைய நாகரிக உலகத்தில் விட்டுக் கொடுக்காது பின்பற்றி கடைப்பிடித்து வருகிறார்கள். அம்பேத்காரின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் நமதருமை மறைந்த அறிஞர் அண்ணாவுக்குப் பின்வந்த கலைஞரின் தமிழக அரசு — கலப்புத் திருமணத்தின் மூலமும், தீண்டாமை ஒழிப்பினாலும், காதல் ஜோதி, புதிய பூமி போன்ற கலைத்துறை வாயிலாகவும் புகுத்தி இவ்வளவு தீவிரம் காட்டாதிருந்தால் இன்னும்கூட தாழ்த்தப் பட்ட பெருங்குடி மக்கள் நாயினும் கீழாகத்தான் போயிருப்பார்கள்.

"அன்னார் வாங்கிய பட்டங்களை அனைத்துலகமும் போற்றும் மகாத்மாவும், ஆசியாவின் ஜோதியென்று அழைக்கப்படும் நேரு பெருமகனாரும், முன்னாள் குடியரசுத் தலைவர் சர்வ பள்ளி டாக்டர் இராதாகிருட்டிணனும், இன்றைய குடியரசுத் தலைவர் கிரியும்கூட வாங்கவில்லை." இப்படிப் பட்ட மாமேதையின் தாழ்த்தப்பட்ட மக்களின் தனித் தொகுதி வாதத்தைக் கண்டு மகாத்மாவே நடுங்கி விட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

அதன் விளைவாகத்தான் 1931-ம் வருடம் இலண்டன் வட்ட மேஜை மாநாட்டில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இந்தியாவில் "தனித் தொகுதி" வேண்டுமென்று எழுந்த முழக்கமானது அண்ணலை மட்டுமல்ல; அனைத்துலக மாமேதைகளையும், பெரும் காங்கிரஸ் கட்சியினரையும் கவலைக்கிடமாகச் செய்து விட்டது.

நாடுகள்தோறும் மொழிகள் வேறு என்பதுபோல், வடநாட்டில் மகர்—பறையர் என்றும், தமிழ் நாட்டில்— ஆதிதிராவிடர் (பறையர்) என்றும், ஆந்திரத்தில்—ஆதி ஆந்திரர் என்றும், கர்னாடகத்தில் —ஆதி கர்னாடகர் என்றும், கேரளத்தில்-தீயர் என்றும் அழைக்கப் படுகிறது. இவைபோக பள்ளர், பஞ்சமர், ஹரிஜன், ஆதிசூத்திரர், நாவசூத்திரர், அருந்தியர், தேவேந்திரர், இவைபோல எண்பத்தியாறு தாழ்த்தப்பட்ட சாதிகள் இந்தியாவிலிருந்து வருகிறது.

இக்கொடுமைக்கு ஆட்பட்டிருக்கும் தாழ்த்தப் பட்டவர்களின் சாதியைக் கணித்து அவர் ஒருபுத்தகமே எழுதியுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

நமது தமிழ் நாட்டில்மட்டும் எழுபத்தியேழுவகையான சாதி பெயர்கள் வழங்கி வருகிறது, ஊருக்குநடுவே வாழ்க்கையை நடத்தாத தாழ்த்தப்பட்டவர்கள் அன்றைன்தினம் ஊருக்கு வெளியேதான் வாழ்க்கை நடத்தி வந்திருக்கிறார்கள்.

இத்தகையோர் மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஆரியர் (பார்ப்பனர்) களின் வருகைக்கு முன்பிருந்த ஆதிபழங்குடிகளாகும்.

இம்மக்களை வைற்றிகண்ட அன்றைய ஆரியர்கள்தான் தாழ்த்தப் பட்டவர்களாகவும், தீண்டப்படாதவர்களாகவும் ஆக்கினார்கள்.

இந்த சாதி இந்துக்களின் தீராத கொடுமை தாங்கமுடியாமல்தான் தாழ்த்தப்பட்டவர்கள் பௌத்த மதத்தையும், இந்துமதத்தையும், இஸ்லாம் மதத்தையும், கிருத்துவ மதத்தையும் தழுவினார்கள்.

மனிதரில் ஏற்றதாழ்வு உண்டு என்று எதைக் கொண்டு வைதீக பூரிசாமியாரும், சங்கராச்சாரியாரும், புரோகிதர்களும் கூறுகிறார்களோ தெரியவில்லை.

தாழ்த்தப்பட்டவர்கள் மாட்டுக்கறி சாப்பிட்டால் மட்டும் மகா பாவம். ஆனால், அதேமாட்டிலிருந்து கிடைக்கப்படும் பால், தயிர், மோர், வெண்ணை, நெய், பாதரட்சை, தீப்புபோன்றவைகளை மட்டும் சாதிஇந்துக்கள் உபயோகித்துக் கொள்ளலாமாம்!

ஆகையால், தாழ்த்தப்பட்டோரின் நிலையானது அன்னார் செய்த சட்டத்தால்தான் இன்றையதினம் மந்திரிகளாகவும், மாவட்ட ஆட்சியாளர்களாகவும், பதிவுபெற்ற அதிகாரிகளாகவும்' டாக்டர்களாகவும். வழக்கறிஞர்களாகவும் வர முடிந்தது. நகர்புறங்களிலேவாழும் தாழ்த்சப்பட்டவர்களின் வீடுகளில் வேண்டுமானால் தகர குவளைகளுக்குபதிலாக எவர்சில்வர் பாத்திரங்களும், பித்தளை சாமான்களும், நகை நட்டுகளும். நல்ல விதமான துணி மணிகளையும் காண முடிகிறது.

நாட்டுப்புறங்களிலே உள்ளவர்கள் இன்னும் அந்த மட்பாண்டங்களையும், பண்ணையில் சாதி இந்துவான-ஆண்டைக்கு அடிமையாகத்தான் இருந்து பறை கொட்டுவது முதல் பாத்தி நடுவது வரை நடந்து வருகிறது. எனவே, இன்றைய தாழ்த்தப்பட்டவர்களின் நிலையானது உயர்வை இன்னும் அடையவில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. மறைந்த மாமேதை காஞ்சியின் காவலர் சொன்ன வர்ணாஸ்ரம தர்மம் என்று இந்தியாவிலும், இந்து மதத்திலிருந்தும் ஒழிக்கப்படுகிறதோ, அன்றைய தினம்தான் "தாழ்த்தப்பட்டோரின் நிலை"யில் அம்பேத்கார் கண்ட மறுமலர்ச்சி மனிதசமுதாயம் காணமுடியும். *

உனக்கா கல்யாணம்......?

ஆமார் ஆறு மாதங்களுக்கு முன்னுல் என் கடைசித் தோழிக்கும் திருமணமாகி விட்டது. அவளும் புக்ககம் போய் மறுபடியும் தாய் வீடு வந்திருக்கிருள். அவளுக்கு இது ஐந்தாவது மாதம். கடந்த இரண்டு வருடங்களாக அவள்தான் என் உயிர்த் தோழி! மற்ற தோழிகளெல்லாம் இரண்டாண்டுகளுக்கு முன்னுடியே திருமணமாகிப் போய்விட்டனர்.

எங்கள் தோழியர் குழுவில் நான்தான் இப்பொழுது புக்ககம் போக முடியாத சூழ்நிலையில் இருக்கின்றேன். என் உள்ளத்திலேதான் எத்தனை கற்பனைகள்—ஆசைகள்— தாபங்கள்—எண்ணங்கள். எனக்கும் 'அந்த' வயது கடந்துக் கொண்டிருக்கின்றது. என் தோழி சமீபத்தில் திருமணம் செய்துகொண்ட சுசீலா எப்பொழுதுமே முந்திவிடுவாள் என்னை.

திருமணம் ஆன பிறகு என் தோழிகள் எப்பொழுதாவது எங்கள் கிராமத்துக்கு வரும்பொழுது அவர்களுடைய கணவர்கள் தங்களிடம் நடந்துகொள்ளும் விதமும் —செய்யும் குறும்பும் கதை கதையாகச் சொல்வார்கள்.

மாலை நேரத்தின் கதிரவனின் பொன்னிறக் கதிர்கள் மலையடிக் குட்டைத் தோப்பில் தென்னங் காற்ருேடு சிலுசிலுக்கும். என் தோழிகள் ஒவ்வொருவரும் தங்கள் அனுபவங்களைச் சுவையோடு சொல்லும்போது — என் மனம் ஏக்கத்தால் சுருங்கும் — கண்கள் மனத்தின் சாயலை கண்ணீர் மூலமாகத் தெரிவிக்கும். அப்பொழுதெல்லாம் மற்றவர்கள் நான் கண்ணீர்விட்டுக் கலங்குவதைக் காணக் கூடாது என்று அவர்கள் சொல்லும் நிகழ்ச்சியைக் கேட்டு சிரிப்பதுபோல் கண்களைப் புடவை முனையால் ஒற்றிக்கொள்வேன்.

மாலை நேரத்தின் சிலுசிலுக்கும் காற்றில் சொன்ன நிகழ்ச்சிகள் அன்றிரவில் செவிகளில் எதிரொலிக்கும். அருகில் இருந்த காற்றில் பெரிய குட்டையில் இருந்து வரும் சில்லென்ற காற்றும் தென்னை மரங்களின் இதமான காற்றும் ஒரு பெண், தன் பருவ காலத்தில் ஏங்கித் தவிக்கும் இன்ப உணர்வுகளும் என் உடலிலும் உள்ளத்திலும் ஒருவிதமான ஸ்பரிச உணர்வை உண்டு பண்ணி—இரவெல்லாம் ஏக்கத்தின் பிரதிபலிப்பால் கண்ணீர் விட்டு விட்டு தூக்கமில்லாமல் செய்துகொண்டிருக்கிறது. இது வாடிக்கை.

இந்தத் தொல்லைகள் சுசீலா திருமணம் செய்து கொண்டு போகும் வரை சற்றுக் குறைவாகத்தான் இருந்தது. ஆனுல்!

கடந்த ஆறுமாதமாக இரவின் தொல்லை அதிகமாகி விட்டது, எனக்கும் ஏக்கம் பிறந்து வளர்ந்து ஆலம்விழுதாக மாறிவிட்டது இரண்டு வாரங்களுக்குமுன் ஒரு நாள்—

வைகுண்ட ஏகாதேசி திருபாற்கடலில் நடந்துக்கொண்டிருந்தது. நான்குபக்கமும் வயல் சூழ மனத்தில் ஆசாபாசங்கள் — தாபங்கள் உள்ளத்தில் அடக்கிக் கொண்டு ஏதோ இயந்திர கதியில் இயங்கி வரும் எனக்கு இன்று—

சற்று ஆறுதலோடு—நெஞ்சுக்கு இதத்தையும் உண்டாக்கியது. காலையில் இருந்து விழாவுக்கு போகவேண்டும் என்ற உத்வேகம் ஆனுல்—

— மலரடியான் —

திருப்பாற்கடலுக்கு விழா நடக்கும் இடத்திற்கு வந்த பிறகுதான் நெஞ்சின் சுமை ஏறியது. பாரமும் —கவலையும்—உணர்ச்சியின் குத்தலும் அதிகமாகியது.

விழா நடந்துக் கொண்டிருக்கிறது. எனக்கு ஒவ்வொரு நிமிடமாக உள்ளத்தில் கவலை எல்லையை முட்டிக் கொண்டிருந்தது. இருக்காதா பின்னே—

நான் ஒரு ஓரமாக நின்றிருந்தேன். தூரத்தில் இருந்த அரச மரத்திற்குப் பின்னுல் என் தோழி தேவகியின் கணவன் அவள் தலையில் மல்லிகைப் பூவை வைத்துக் கொண்டிருந்தார். பூவை வைத்து முடித்த பின் சுற்றும் முற்றும் பார்த்தான். ஆள் நடமாட்டம் அவ்வளவாக இல்லை. அவள் காதில் என்ன கிசுகிசுத்தானே தெரியவில்லை. அவள் கறுப்பு முகம் குங்குமச் சிவப்பாகச் சிவந்தது. பின்னர் அவளுடைய வலது கையைப் பிடித்து உயர்த்தி தன் உதடுகளால் முத்தமிட்டான். அவள் அந்தப் புரமாக முகத்தைத் திருப்பிக்கொண்டாள். வெட்கத்தால்.

எனக்கு அழுகைத் தவிரய மற்ற எல்லா உணர்ச்சிகளும் பீரிட்டன. என்னை வந்து எனக்கு கல்யாணம் ஆகி என் கணவர் தொடமாட்டாரா என்ற எண்ணமும் வேதனையும் ஏற்பட்டது. அந்த வேதனை தாங்கியபடியே வேரிடம் நகர்ந்துக் கொண்டிருந்தேன்.

எதிரே சுசிலா அவள் கணவனுடன் கையைக் கோர்த்துக்கொண்டு சிரித்தபடியே போகின்ருள். அவளுடைய கணவரின் கையை கவனிக்கின்றேன். அவருடைய கைகள் நிமிடத்துக் கொருதரம் அவளுடைய கையை கிள்ளிக்கொண்டிருக்கின்றன. அவளும் பதிலுக்கு அவருடைய கையைக்கிள்ளுகிருள்.

சுசிலா என்னைவிட ஆறுமாதம் சின்னவள். ஆனுல்! அவளுக்கு கல்யாணம் ஆகி தாயாகும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிருள். என் அடிமனத்தில் பொருமை வளர்ந்தது.

"சே! வெட்கமில்லாம எப்படி கையைக் கோத்துகிட்டுப் போருங்க பாரேன்" என்று என் மனம் பொறுமியது. எனக்கு நன்ருகத் தெரியும். எனக்கும் அவளுக்கு கிடைத்த கணவரைப்போல் ஒருவர் கிடைக்காததால் வேதனை அடைந்த—நம் கையையும் கிள்ளி சிலுகிலுப்பூட்ட கணவன் இல்லையே என்ற கவலையில்—மனத்தில் ஏற்பட்ட பொருமையில் வந்த எண்ணம்தான் இது.

அதற்குமேல் அங்கிருந்தால் பைத்தியம்பிடித்துவிடுமோ என்று என்று வீட்டுக்கு வந்துவிட்டேன்.

நாளுக்கு நாள் என் கலகலப்புக் குறைந்து ஏதோ ஒன்றை அடைய விரும்பி அடைய முடியாத நிலையில் மனம் சுருங்கிப் போனதை

சிறுகதை!

என் அம்மா புரிந்துக் கொண்டும் பேசாமல் இருந்ததை நினைத்துப் பார்க்கும் பொழுது வேதனையாக இருந்தது. ஒருவேளை அவளுக்கு இதைப் பற்றியோ—அல்லது என் எண்ணங்களைப் பற்றியோ தெரியாமல் இருக்குமா? சே! சே! அவளும் பெண்தானே. புரியாமலா இருக்கும்,? பின் ஏன் சும்மா இருக்கின்றாள்?

ஊரைவிட்டு சற்று ஒதுங்கி மலையடிவாரத்தில் அமைந்து கிடந்தது எங்கள் வட்டாரம். அதிலும் அந்தப் பத்துக் குடிசைகளையும் தள்ளி இருக்கிறது எங்கள் குடிசை.

இரவு! சின்ன குடிசையில் நானும் என் அம்மாவும் படுத்துக் கொண்டிருக்கின்றோம். என் அப்பா கழனியை சுற்றிவரப் போய்விட்டார். வேர்க்கடலைப் பயிர். ஏன் தான் திருப்பாற் கடலுக்குப் போனாரோ? என்று என் மனம் எண்ணியது. ஒவ்வொரு நிகழ்ச்சிகளாக நெஞ்சில் நடைப் போட்டது. சே! ஏன்தான் இப்படி நினைவுகள் என்னைக் கொன்று வருகின்றதோ என்று மனத்துக்குள்ளே பொருமிய படியே புரண்டுப் புரண்டுப் படுத்தேன். அப்படியும் தூக்கம் வந்த பாடாகக் காணோம். ஏக்கம்தான் நிரம்பி வழிந்தது.

சற்று நேரத்திற்குப் பிறகு காவலுக்குப் போயிருந்த அப்பா வந்து கதவைத் தட்டும் ஓசை கேட்டது. நான் பேசாமல் தூங்குவதுபோல் கிடந்தேன். லேசான குரட்டை ஒலியுடன் தூங்கிக் கொண்டிருந்த என் அம்மா எழுந்துப் போய் கதவைத்திறந்தார்கள்.

என் அப்பா தண்ணீர் குடிப்பதும், பின் அவர் படுப்பதும் ஒலியின் மூலமே நான் கண்டுகொண்டேன்.

என் அப்பாவும், அம்மாவும் பேசிக்கொண்டே இருந்தனர்—என்னைப் பற்றி. நான் காதுகளைத் திட்டிக்கொண்டேன்.

அவர்கள் பேசும் பேச்சின் தன்மையைக் கேட்டால் இந்த ஜென்மத்தில் எனக்கு கல்யாணம் ஆகாது போல் இருக்கிறது. ஏன் என் கல்யாணத்தை தள்ளிப் போடுகின்ருர்கள். அதனுல் அவர்களுக்கு என்ன லாபம்?

எனக்கு கோபம் பற்றிக் கொண்டுவந்தது. எழுந்து உடனே ஏன் கல்யாணம் செய்து வைக்கவில்லை என்று கேட்கவேண்டும் போல் இருந்தது. ஆனுல் அடக்கிக் கொண்டேன். அதற்குமேல் அவர்கள் பேசவில்லை. தூங்கிவிட்டார்கள்.

இரவு முழுவதும் நான் தூங்கவே இல்லை. எனக்கு ஏன் இன்னும் கல்யாணம் செய்துவைக்காமல் தட்டிக் கழிக்கின்ருர்கள். என்ன உலகம் இது. ஒரு பெண்ணின் மனநிலை அறியாமல் மெத்தென இருக்கிருர்களே!

ஆவது ஆகட்டும் நாளைக்குக் கேட்டு விடுவது என்று தீர்மானித்துக்கொண்டே இருக்கிறேன். சேவல் கூவுகிறது.

என் அப்பா கழனிக்குப் போய் இருக்கிருர். காலைச் சிற்றுண்டியை கொடுத்துவிட்டுவந்து என் அம்மா அடுக்களையில் உலையைக் கவனித்துக்கொண்டிருக்கிருர்கள்.

எனக்கு கேட்கலாமா? வேண்டாமா? என்ற எண்ணம். தேவகிக்கு கல்யாணம் ஆகும்பொழுது இருபத்தி இரண்டு வயது, சுசிலாவுக்கு திருமணம் ஆகும்பொழுது இருபத்தி ஒன்று. அப்படி இருக்க நாம் ஏன் இன்னும் ஒரு வருடம் கழித்து திருமணத்தை தள்ளிப் போடக் கூடாது. அப்புறமாக கேட்டால் என்ன? என்று எண்ணினேன்.

எனக்கு கல்யாணம் செய்து வை என்று எப்படிக் கேட்பது. தவருக எண்ணிக்கொண்டால், அல்லது திட்டிஞல், குழப்பம்தான் மிஞ்சியது.

எப்படி—எந்த முறையில் கேட்பது என்று யோசித்துக்கொண்டே அடுக்களைக்குப் போனேன். அம்மா அரிசியை அலைத்துக் கொண்டிருந்தார்கள். நான் மெதுவாகப் போய் உட்கார்ந்தேன். நெஞ்சு வேகமாக "பக் பக்" என்று அடித்துக் கொண்டது. அருகில் இருந்த அரிவாள் மனையை எடுத்து காய்களை நறுக்கியபடியே இருந்தேன்.

சற்று நேரத்துக்கு எதுவுமே பேசவில்லை. மெதுவாக மிகவும் மெல்லிய குரலில் ஆரம்பித்தேன்.

அம்மா ...... அவ்வளவு தான் அதற்குமேல் வார்த்தைகள் வரவில்லை. எண்ணிய எண்ணங்கள் எங்கே? தொண்டைக் குழியிலே படுத்துக்கொண்டு தூங்கிவிட்டதா?

என்னமா? ...... என்ருள் என் அம்மா இதமாக. மேற்கொண்டு நான் என்ன பேசுவது. மௌனமாக இருந்தேன். மீண்டும் அதே அம்மா...! என்றேன்.

என்ன...என்ருள் அம்மா.

எனக்கு வயசு என்னம்மா ஆவுது என்றேன்.

இருபதோ இருபத்தொன்னோ? என்ருள்.

சுசிலாவுக்கு என்னம்மா வயசு இருக்கும் என்றேன்.

உன் வயசுதாம்மா இருக்கும் என்ருள் அம்மா?

நான் மிகவும் பணிவாக அதே நேரத்தில் ஆதரவான வார்த்தைகள் கிடைக்காதா என்ற எண்ணத்தில், அவள் மாமியார் வீட்டுக்குப் போய்விட்டு இப்பொழுது வந்திருக்காம்மா! — இப்ப அவளுக்கு மாங்காய் பிடிக்குதாம் 'அதுப் போல எனக்......'

அவ்வளவுதான் அதற்குமேல் வார்த்தைகள் வரவில்லை. அம்மா என்னை கண்ணீர் சொறியும் கண்ணீருடன் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிருள்.

கண்ணீர் பொட்டு பொட்டாக வருகிறதே தவிர வார்த்தைகள் வரவில்லை. ஒருவேளை நான் சொல்ல வந்ததை அவள் புரிந்து கொள்ளவில்லையா?

மீண்டும் "ஏம்மா எனக்கு எப்பம்மா கல்யாணம் என்றேன்"

"உனக்காடி கல்யாணம்' அதற்கு நீ தகுதியானவ இல்லடி—உனக்கு வயசு ஆச்சேத் தவிர நீ பருவம் அடையவில்லையே உனக்கு தெரியாதாடி என்ருள். அவ்வளவுதான். அவளுக்கு வார்த்தைகள் வரவில்லை. அழுகைதான் வந்துக் கொண்டிருக்கிறது.

நான் வாசலில் இருந்த கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்துக் கொண்டிருக்கின்றேன்." உனக்காடி கல்யாணம் அதற்கு நீ...என்ற வார்த்தைகள் வந்துகொண்டிருக்கின்றது என் நினைவில். கண்ணீரும்—தலைமுடியும் காற்றில் கலகலத்து பரவுகிறது. கண்ணீர் கன்னத்தில் உறைகின்றது.

பின் ஏன் எனக்கு இத்தனை உணர்ச்சிகள் — ஆசாபாசங்கள்—தாபங்கள் நெஞ்சில் எழுந்தன... எழுகின்றன?

★

கேட்டீரா சேதி!

களையெடுப்பு

அலுவலக நிர்வாகமானாலும் சரி, அரசாங்க நிர்வாகமானாலும் சரி, களையெடுக்கப்பட வேண்டிய காளான்கள் இருந்தால், நிர்வாகம் நிலைகுலைந்து போவதுடன் நிறுவனத்துக்கே கேடு வந்து சூழும் என்பதை உணர்வதில் மா-சே-துங்கின் சிவப்புச் சீனா பின்னடைந்திருந்ததில்லை. தனக்கோ தனது கொள்கைகளுக்கோ ஒத்து வராதவர் என்று ஒருவரையோ அல்லது ஒரு குழுவையோ மா-சே-துங் கருதுவாரானால், உடனடியாக அத்தகையவர்களை வீட்டுக்கு அனுப்புவது மட்டுமல்ல, இயன்றவரையில் இருக்குமிடம் தெரியாமல் செய்துவிடும் கலையில் கை தேர்ந்தவர் மா-சே-துங். செஞ்சீனா தோன்றிய இந்தக் குறுகிய காலத்துக்குள் எத்தனையோ முறை கட்சி மட்டத்திலும் சரி, அரசாங்க மட்டத்திலும் சரி களையெடுப்புக்கள் நடந்திருக்கின்றன. அதைப் போலவே, சில ஆண்டுகளுக்கு முன்பு, மாவின் வலக்கரமாகக் கருதப்பட்ட லின்-பியா என்பவர், அவரது அனைத்துப் பொறுப்புக்களிலிருந்தும் துரத்தியடிக்கப்பட்டிருந்தார். என்றாலும், லின் பியாவின் ஆதரவாளர்கள் என்று கருதப்படுவோரின் தொகை நாளுக்கு நாள் பெருகி வந்ததாம் அரசுத் துறையில், மாவட்ட, தாலூகா மட்டத்தில்! இப்போது அத்தகைய ஆதரவாளர்களைக் களையெடுப்பதில் தீவிரமாக முயன்று கொண்டிருக்கிறதாம் செஞ்சீனா. பயிர் செழித்து வளர வேண்டுமானால் களையெடுப்பு தவிர்க்க முடியாததாயிற்றே! இதிலே வேண்டியவர், வேண்டாதவர் என்பதற்கு இடமேது?

இதுதான் காரணமோ?

கட்சித் தாவல்களைத் தடை செய்யச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்பதிலே தீவிரம் காட்டிக்கொண்டிருந்த மத்திய அரசு, இப்போது அந்தக் கொள்கையைக் கிடப்பில் போட்டுவிட்டது. இது குறித்து விளக்கம் தர வந்த தலைமை அமைச்சர் இந்திராவும் பிரச்னையில் பட்டும் படாமலும் பதில் தந்து வழுக்கி விழுந்திருக்கிறார். மத்திய அரசு ஏன் இப்படி ஒதுங்கிவிட்டது என்று நாம் சிந்தித்துக் கொண்டிருந்த போது, நமக்குத் தெளிவு கிடைக்க ஒரு செய்தி வந்திருக்கிறது. மணிப்பூர் மாநிலத்தில் அண்மையில் தான் பொதுத் தேர்தல் நடைபெற்று, இந்திரா காங்கிரசுக்கு ஆட்சிபலம் கிட்டாமல், மணிப்பூர் மக்கள் கட்சிக்குப் பெரும்பான்மை கிட்டிவிட்டிருந்தது. மாநிலங்களைக் கவிழ்த்ததும் இல்லை; கவிழ்க்கப் போவதுமில்லை என்று பிரதமர் அறிவிப்புக் கொடுத்த சூடுகூட இன்னும் தணியவில்லை. மணிப்பூர் மக்கள் கட்சியின் ஆட்சியைக் கவிழ்த்து, இந்திரா காங்கிரஸ் பெரும்பான்மை தேடிக்கொள்ள "முற்போக்குக் கருத்துள்ள சட்டமன்ற உறுப்பினர்"களை அணுகுவதற்கு, அந்தக் கட்சியின் தலைமை, மணிப்பூர் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு, அனுமதி வழங்கி விட்டதாம்! விரைவில் மணிப்பூர் கவிழக்கூடும்? அதாவது இந்திரா காங்கிரஸ், மணிப்பூரின் ஆட்சியில் அமரக்கூடும்! இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் இந்திரா காங்கிரசின் விரலிடுக்கில் மணிப்பூர் கொண்டு வரப்பட்டு விடும்! இதை விடவும் விளக்கமாகச் சொல்லுவதானால், மத்திய அரசை ஆளும் கட்சி, மணிப்பூர் என்ற மாநிலத்திலும் ஆளும் கட்சியாக ஆக்கப்படும். இதையெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதனால்தானோ என்னவோ கட்சித் தாவல்களைத் தடை செய்ய சட்டம் கொண்டு வருவதிலே தாமதம் காட்டப்படுகிறது என்ற நமது குற்றச்சாட்டு வலுவற்ற ஒன்றல்ல!

ஊழலோ ஊழல்!

இலட்சியத்தை எட்டிப் பிடிக்க —அல்லது கொள்கையின் உறுதிப்பாட்டை நிலைநாட்ட ஒரு தொழிலாளிக்குக் கொடுக்கப்பட்டுள்ள சக்தி மிகுந்த ஆயுதம்தான் "வேலை நிறுத்த உரிமை" என்பது. இதனைப் பல சந்தர்ப்பங்களில் நமது அருமை கம்யூனிஸ்டு கட்சி நண்பர்கள் எடுத்துக் காட்டி விளக்கி இருக்கிறார்கள். வேலை நிறுத்தங்கள் சட்ட விரோதமானதாக்கப்படவேண்டும் என்று எங்கோ ஓர் மூலையில் ஒரு குரலெழுந்தபோது, வன்மை மிகுந்த கண்டனத்தை வெளிப்படுத்தி இருப்பவர்களும் இந்தக் கம்யூனிஸ்டுகள்தான்! வேலை நிறுத்தம் என்றால் கம்யூனிஸ்டு; கம்யூனிஸ்டுஎன்றால் வேலை நிறுத்தம் என்று பொருளோ என்று மயங்கும் அளவுக்கு நெருங்கிய கொள்கைப் பிணைப்புடையவர்கள் அவர்கள். எனவே, கம்யூனிஸ்டுகள் ஆளும் மாநிலங்களில் வேலை நிறுத்த உரிமை தாராளமாகவே கிடைக்கும் என்று எவரும் எதிர்பார்க்கத்தான் செய்வர்! எதிர்பார்க்கத்தான் வேண்டும்! கம்யூனிஸ்டுகள் ஆளும் மாநிலமான கேரளாவிலும் அப்படித்தான் நடந்திருக்க வேண்டும்! ஆனால், கேரள அரசு, தலைமைச் செயலகத்தில் அரசின் நிருவாகக் குறைபாடு நிர்வாக ஊழல் என்று தொழிலாளர்களால் கூறப்பட்டு, அந்த ஊழலை ஒழிக்க வேண்டுமென்று தலைமைச் செயலக ஊழியர்கள் மூன்று மணி நேரத்திற்கும் அதிகமாக உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டார்களாம்! இதன் பலனாக, அந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்ட ஊழியர்களது அரை நாள் ஊதியம் பிடித்தம் செய்யப்படும் என்று வலது கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர் அச்சுதமேனன் அறிவித்திருக்கிறார்! பாவம் தொழிலாளர்கள்! பாவம் கம்யூனிஸ்டுகள்! ஊழல், ஊழல் என்று குரல் கிளப்புவோர் இந்தச் செய்தியின் இதயத்தைத் தொட்டுப் பார்க்க வேண்டாமோ?

—தொகுப்பு : ராஜிமணாளன்.

★

பிறவிக் கலைஞர்

திரு. நெ. து. சுந்தர வடிவேலு
(சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்)

அவ்வை திரு. தி. க. சண்முகம் அவர்களின் மணிவிழா. முதல்வர் அவர்கள் தலைமையில் நடப்பது மெத்த மகிழ்ச்சிக்குரியது. தலை சிறந்த நாடகக் கலைஞர் ஒருவரின் மணிவிழாவை இன்னும் இரண்டு ஆண்டுகளில் பொன் விழா கொண்டாடவிருக்கும் முத்தமிழ்க் கலைஞர் ஒருவரின் தலைமையில் கொண்டாடுவது தமிழ்த் தாயின் தலைமையிலேயே கொண்டாடுவது போன்றதாகும்.

பழந் தமிழ்ப் புலவர்களிலேயே அவ்வைக்கு நிகர் அவ்வையே. அவ்வாறே அவ்வையாக நடிப்பதிலும். அதுவும் ஆண் மகனாக இருந்தும்-அவ்வைப் பாட்டியாக நடிப்பதில் அவ்வைக்கு நிகர் அவ்வையே. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடியதுபோல் நாடக மேடை ஒரு பல்கலைக்கழகம். அத்தகைய உணர்வைத் தமிழ் நாட்டு நாடகமேடையில் தோற்றுவித்தவர்களுள் பல வகையாலும் தன்னிகரற்று விளங்கும் தகைமையாளர் கலைஞர் அவ்வை சண்முகம் அவர்களே. கடந்த அரை நூற்றாண்டுக் காலமாகத் தமிழ் நாடக மேடை பல வகையாலும் தர உயர்வு பெறுவதற்கு அப்பெருந்தகை ஆற்றிவரும் பணிகள் போற்றிப் புகழ்ந்து பின்பற்றவும் தக்கன — வேண்டியன. அவர்களுடைய நாடகப் பணியில் புராணங்களுக்கும் இடம் உண்டு; புதுமைப் புரட்சிகளுக்கும் இடம் உண்டு; சமயக் கருத்துக்களுக்கும் இடம் உண்டு; சமூகச் சீர்திருத்தங்களுக்கும் இடம் உண்டு: வரலாற்று வாய்மைகளுக்கும் இடம் உண்டு; இன்பங்களுக்கும் இடம் உண்டு; இயலுக்கும் ஏற்றம் உண்டு; இசைக்கும் பெருமையுண்டு. நாடகத்திற்கும் நல்வாழ்வு உண்டு.

அவர் பெற்ற போற்றுதல்கள் எல்லாம்-அவர் நாடகங்கள் பெற்ற சிறப்புக்கள் எல்லாம்-தமிழ் நாடகக் கலை பெற்ற தனிச் சிறப்புகளாகும்; தமிழ்த் தாய் பெற்ற புதுப்புகழ் மணிகள் ஆகும். பெற்ற தாய்க்குக் கலைஞர் சண்முகம் தேடித் தந்துள்ள பெருமைபோல் நாம் ஒவ்வொருவரும் ஒல்லும் வகையால் எல்லாம் தமிழ்த் தாய்க்குத் தனிப் புகழ் சேர்க்கவேண்டும் என்பதே அவர்களுடைய மணி விழாவில் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய உறுதிப்பாடு ஆகும்.

கலைஞர் சண்முகத்தின் தொழில் திறமைகள் உயர்ந்தவனவா. அவருடைய மனிதப் பண்பாடுகள் உயர்ந்தனவா என்னும் வினவிற்கு விடை சொல்லுவது அவ்வளவு எளிதில்லை. அவருடைய துறைகளோடு போட்டி போடுபவை அவருடைய தீந்தமிழ்ப் பண்பாடுகளேயாகும். குறிப்பிட்ட ஓர் அரசியல் அமைப்பிடம் - தமிழரசுக் கழகத்திடம்-சிலம்புச் செல்வர் தலைவர் ம. பொ. சி.-யிடம் தனி ஈடுபாடு கொண்டவர் என்றாலும் எந்த அரசியல் அமைப்பிடமும் பகை நோக்கு இல்லாதவர். தரணியில் நடைபெறும் தவறுகளுக்கு வெறுப்புகளை காட்டுவதைவிட இரக்கங்களை மிகுதியாகக் காட்டுபவர். செய்யும் தவறுகள் செய்பவர்கட்கு தவறாகுமே என்று அறியாமல் தவறு செய்கிறார்களே என்று இரக்கம் கொள்பவர். இத்தகைய பண்பாட்டினை அரசியல் துறையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் ஒருவரிடமும், கலைத்துறையில் நம்முடைய மதிப்பிற்குரிய கலைஞர் சண்முகம் ஒருவரிடமும் மிகுதியாகக் காண முடிகிறது. எனவே தான். நான் தொடக்கத்தில் குறிப்பிட்டதுபோல் இந்த மணிவிழா கூட தக்கார் தலைமையில் தக்காருக்கு நடைபெறுகின்றது.

கலைஞர் சண்முகம் அவர்கள் இளமை முதல் தொழில் துறைக் கலைஞர்தான் என்றாலும் அவர் பயில்முறைக் கலைஞர்களிடமும் காட்டிவந்துள்ள பரிவுகள் எண்ணியெண்ணி இறும்பூதும் இன்பமும் எய்தத் தக்கன. வளர்ந்து விட்ட பெரியவர்கள் வளருகின்ற இளைஞர்கள் இடத்தில் பரிவு காட்டுவது தான் தலையாய பண்பாடு ஆகும். அத்தகைய பண்பாட்டிற்கு ஓர் உறைவிடமாக ஒளிருபவர் கலைஞர் சண்முகம் ஆவார்கள். அவர்களால் பல்வகை ஆதரவுகளும் பெற்று மெருகு ஏறிய கலைஞர்கள் அவரினும் சிறந்த நிலையில் இருப்பதை அறிந்து அவர் ஈன்றபொழுதிலும் பெரிதுவக்கின்ற பெருமையை அறிந்து பூரிப்பவர்களுள் யானும் ஒருவன்.

கலைஞர் சண்முகம் அவர்கள் நடிகர் மட்டும் அல்லர்; சிறந்த எழுத்தாளர். அவருடைய 'நாடகக்கலை, என்ற நூல் சென்னை பல்கலைக் கழகத்துக்குப் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு பாட நூலாக வைக்கப் பட்டிருக்கிறது என்றால் அவர்கள் எழுத்தின் சிறப்பைப் பற்றிச் சொல்வதற்கு வேறு என்ன இருக்கிறது? எனக்குத் தெரிந்த வரையில் ஒரு நடிகரின் எழுத்திலக்கியம் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பாடமாக வைக்கப்பட்டிருப்பது இந்த ஆண்டே ஆகும் இதுவே முதல் முறையாகும். அவ்வப்போது, அவர் எழுதி வந்துள்ள கட்டுரைகளும் அவருடைய அறிவின் அகலத்தையும், பண்பின் ஆழத்தையும் காட்ட வல்லன. அவருடைய கட்டுரைகளில் தரக் குறைவான கருத்தோ சொல்லோ ஒன்றுகூட இராது. பிறவிக் கலைஞராகிய அவர் பிறவி நடிகராகமட்டுமில்லாமல் பிறவி எழுத்தாளராகவும் இருப்பது நாம் செய்த நற்றவமாகும். யான் நேரில் வர இயலாது போனாலும் இந்நிலையில் என்னுடைய எளிய மணிவிழா காணிக்கையாக அமைந்துள்ள இந்தக் கட்டுரையில் இறுதியாக-ஆனால்-உறுதியாகக் குறிப்பிடத் தக்கது அவர் நம் மாண்புமிகு கலைஞர் ஆட்சியில் பெற்ற ஒரு பெரும் புகழைப் பற்றியே ஆகும். ஆங்கில நாட்டு மாபெரும் கவிஞர் ஷெல்லி முழங்கினார் : "புலவர்கள் உலகத்தின் முத்திரையில்லா சட்டமன்ற சான்றோர்கள்" என்று. ஆங்கிலக் கவிஞரின் ஆசைக் கனவிலும், ஆயிரம் மடங்கு சிறந்த நனவு நம் மாண்புமிகு கலைஞர் முதல்வர் அவர்களுடைய பேராண்மையால் நிலை நாட்டப்பட்டுள்ளது. அதன் பயனாக கலைஞர்கள் உண்மையாகவே சட்டமட்டறச் சான்றோர்களாகத் திகழ்கிறார்கள். இந்தப் பெரும் பெருமை பெற்றிருக்கும் கலைஞர் சண்முகம் அவர்கள் இன்னும் பல்லாண்டு பல்லாண்டுவாழ்ந்து வைர விழாவும் முத்து விழாவும் கொண்டாடுவாராக!

★

கொடுமைகள் அகலட்டும்!

— எழிற்கோவன் —

★

பூக்கட்டும் புத்தாண்டு மலருனது புதுமை
    புகுத்தட்டும் பகுத்தறிவுப் புரட்சியினை யெதிலும்
நீக்கட்டும் பலமடமை! நிலைக்கட்டும் வாய்மை!
    நிறைக்கட்டும் பாரெல்லாம் பைந்தமிழன் நேர்மை!
தேக்கட்டும் பாலமுதத் தேந்தமிழின் கடலை
    தெறிக்கட்டும் பலநூலாய்த் தெளிரட்டுங் கடமை;
ஆக்கட்டும் புத்துணர்வுக் குமுகாயம்; ஆக்கி
    ஆளட்டுந் தாயாகி அறியட்டும் மாட்சி!

கொட்டட்டும் பாவேந்தர் கொள்கைத்தேன் மழையே!
    கொணரட்டுந் திக்கெட்டுங் கொஞ்சுதமிழ்ப்புகழ்வே!
கட்டட்டும் புத்தறிவுக் கலைக் கூட்டம்; கட்டி
    காக்கட்டுந் தமிழ்பாட்டைக் கண்போன்றே போற்று!
வெட்கட்டும் சூழ்ச்சியரை விரட்டட்டும் வீரம்!
    வெட்கட்டும் புல்லரெலாம் வேகட்டுந் தீயில்!
எட்டட்டுந் தமிழ் மறை நூல் புகழ்வானை; எட்டி
    இனிக்கட்டுங் கரும்பாகி இருக்கட்டும் நன்கே,

மலர்த்தட்டும் அண்ணாவின் எண்ணங்கள்; என்றும்
    மணக்கட்டும் பெரியோரின் மணியான கொள்கை!
புலர்த்தட்டும் பைந்தமிழக் பொற்காலம்! புவியும்
    புகழட்டும் புத்தாண்டுன் புரட்சிநல விளைவை!
உலர்த்தட்டும் பிறநாட்டார் சுரண்டலினை; ஊக்கம்
    உயர்த்தட்டும்; நாட்டுரிமை உணர்த்தட்டும் நன்கே!
அலர்த்தட்டும் பேராண்மை; அகலட்டுங் கொடுமை!
    அறமூட்டும் புத்தாண்டு அணியே நீ வருக!

வினா-விடை

வானொலி நிலையங்கள் இரவு நேரத்தில் ஒலி பரப்பி வந்த தேசிய கீதத்தை நிறுத்திக் கொண்டு விட்டது குறித்து உங்கள் கருத்து என்ன?

இந்திரா அம்மையார் எடுத்துக் காட்டி இருப்பதைப் போல, அந்த கீதம் ஒலி பரப்பாகும் நேரத்தில் அநேகமாக எல்லோருமே தூங்கிக் கொண்டிருப்பார்கள். எஞ்சி இருக்கும் சிலர், எழுந்து நின்று மரியாதை செலுத்துகிருர்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

ஃ ஃ ஃ

"ரிக்கார்டு டான்ஸ்" என்றழைக்கப்படும் ஆபாச நடனங்கள், நாடெங்கும் பரவலாகிக் கொண்டிருப்பதை அனுமதிக்கலாமா?

நாடெங்கும் ஆபாசம் பரவுகிறது என்ருல், ஆபாசத்தைச் சுவைப்பவர்கள் நாடெங்கும் பரவலாக இருக்கிருர்கள் என்றல்லவா பொருள்! தடுத்து நிறுத்த வேண்டியதுதான் — நடத்துபவர்களையும் நடத்துவதைப் பார்க்கப் போகிறவர்களையும்!

ஃ ஃ ஃ

கவிஞர் கண்ணதாசனைப் பற்றி ஒரு வார்த்தை எழுதுங்கள்?

ஒரு வார்த்தை போதுமா? — காற்ருடி!

ஃ ஃ ஃ

"ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்" என்ற கருத்து வெறும் சொற்சிலம்பம்தானு?

தவறு. இதற்கான முன் முயற்சியிலீடுபட்டு, செயல்படத் தொடங்கும் வரையில் பொறுமைகாட்டத்தான் வேண்டும். செயல்படுவது எப்போது? யார்?

ஃ ஃ ஃ

போராட்டம் என்ருல் என்ன?

"ஏதேது, உங்களோடு பெரிய போராட்டமாக இருக்கிறதே?" என்று ஒருவர் இன்னெருவரைப் பார்த்துச் சொல்லும்போது, அந்தப் போராட்டத்துக்கு என்ன பொருளோ, அதே பொருள்தான் இதற்கும்.

ஃ ஃ ஃ

காலை அரும்பி, பகலெல்லாம் போதாகி, மாலை மலரும்!—எது?

"குமுதம்"தான்; அது மறுநாள் கூம்பி விடுமே தெரியுமா?

ஃ ஃ ஃ

மே. வங்கத்தில் நக்சலைட்டுகள் ஒழிக்கப்பட்டு விட்டனரா?

"நக்சல்" என்ற கிராமம் ஒன்று இருப்பதே மேற்கு வங்கத்தில் தானே ஐயா! அதனை ஒழித்து விட முடியுமா என்ன? இந்தக் கிழமைகூட இந்த நக்சலைட்டுகள் அங்கே கொஞ்சம் சலசலப்புக் காட்டி இருக்கிருர்களே!

ஃ ஃ ஃ

சில மாதங்களாக "காஞ்சி" வனப்பிழந்து காணப்படுகிறதே—ஏன்?

"புழுக்கம்" அதிகமாக இருக்கிறதல்லவா—அதனுல்!

ஃ ஃ ஃ

"காஞ்சி"யில் கவிதைகள் அதிகம் இடம் பெறுவதில்லையே—ஏன்?

ஐந்தாண்டுகளுக்குப் போதுமான கவிதைகள் கைவசம் இருக்கின்றன. இருந்தும் சில வேளைகளில்தானே இடம்பெறத் தவறி விடுகிறது? தவிர்க்க முடிவதில்லையே இதனை!

ஃ ஃ ஃ

அண்ணன் முத்துராமன் அவர்களது பெயருக்கு ஒரு கட்டுரை அனுப்பி இருந்தேன். அதுகூடப் பிரசுரிக்கப்படவில்லையே ஏன்?

சொந்தப் பெயரில் வரும் கடிதங்கள்கூட "சென்சார்" செய்யப்படுகிறதையா இங்கே! தடுக்க எவரும் இல்லையே!

ஃ ஃ ஃ

காமராசரும், கண்ணதாசனும் இணைந்து விட்டார்களா?

காட்சிகள் அப்படித்தான் தெரிகின்றன. ஆனுல் காங்கிரசுகள் இணையுமென்று தெரியவில்லை.

ஃ ஃ ஃ

"மாநில சுயாட்சி" குறித்து "குமுதம்" இதழ் கூறும் கருத்துகள் எப்படி இருக்கின்றன?

தமிழ் நாட்டில் இருப்பவர்களுல் "குமுதம்" ஆசிரியர் குழுவைத் தவிர அறிவுத் தெளிவு அற்றவர்கள் என்ற நினைப்பில் இருப்பதைச் சுட்டிக் காட்டுவனவாக இருக்கின்றன.

ஃ ஃ ஃ

நூல் மதிப்புரைக்கு எனது இரண்டு கவிதை [illegible]ங்களை, 'காஞ்சி'க்கு அனுப்பி இரண்டு மாதங்களுக்கு மேலாயிற்று. மதிப்புரை வெளிவரவில்லையே ஏன்?

நீங்கள் அனுப்பிவிட்டால் மட்டும் போதுமா? உரியவர்களது கரத்துக்கு வந்து சேரவேண்டுமில்லையா?

ஃ ஃ ஃ

கவின் நிறைந்ததாகக் 'காஞ்சி'யைக் காணும் நாள் மீண்டும் வராதா?

கறந்த பால் மடியேற முடியாது. ஆனுல் காபியாக மாறமுடியும் அல்லவா!

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-2
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.